MODERN WEAR

பெண்கள், சிறுமிகளுக்கான நவீன ரெடிமேட் ஆடைகள் விற்பனை நிலையம்

இல. 334, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | வைகாசி: 12 | துல் ஹஃதா: 1 | இதழ்: 103

யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 26-05-1990

## 110 பேர் இன்று விடுதலை

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 110 பேர் இன்று சனிக்கிழமை காலை 11 மணியளவில் யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் முன்றலில் விடுவிக்கப்படுவார்கள்.

## நெடுந்தீவில் இந்திய படகு

(நெடுந்தீவு)

திடீர் காற்று, மழை காரணமாக தமிழ்நாடு இராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த இழுவைப்படகு ஒன்று நெடுந்தீவு வடக்கு மணற்கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கியுள்

(8-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு மாகாணசபையை தானாகவே கலையவிடுவதென்று ஈ.பி.ஆர்.எல்.எவ். முடிவு

(லண்டன்)

வடக்கு-கிழக்கு மாகாண சபையை தானாகவே கலையவிட ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் தீர்மானித்துள்ளதாக பி. பி. ஸி. நேற்றுத்தெரிவித்தது.

ஜூன் மாதம் முதலாம் திகதி வடக்கு-கிழக்கு மாகாணசபைகூடாதுவிடின், அது இயக்கமற்றுவிட்டது அல்லது தானாகவே கலைந்து விட்டது என கருதப்படுமென்று பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

மாகாணசபை கடைசியாக கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி கூடியது குறிப்பிடத்தக்கது.

73 உறுப்பினர்களை கொண்ட மாகாண சபை மூன்றிலொரு பங்கினரான 25 உறுப்பினர்களைக் கொண்டே இயங்க முடியும்.

இக்கூட்டம் இலங்கையின் எப் பகுதியிலும்

(8-ம் பக்கம் பார்க்க)

# மலையக மக்களுக்கான எமது போராட்டத்துக்கு தமிழக முதல்வரும், மக்களும் முழு ஆதரவு தரவேண்டும்!

## விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணிவேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

**சிங்கள இனப்படுகொலையை எதிர்த்து தமிழகம் எப்போதும் எமக்கு ஆதரவு தந்து வந்தது. அதேபோல் மலையகம் வாழ் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் அடக்குமுறைகள், கொலைகள், நாடுகடத்தல் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்துக்கு தமிழக முதல்வரும், தமிழக மக்களும் முழுமையான ஆதரவைத் தரவேண்டும்.**

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்திருந்தது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

21-5-90 அன்று தமிழீழமெங்கும் மலையகம்வாழ் தமிழ் மக்களில் ஒரு லட்சம் பேரை நாடு கடத்த சிறிலங்கா அரசு முயல்வதைக் கண்டித்தும் மலையகத்தில் தமிழ் மக்கள்மீது நடத்தப்படும் அடக்குமுறைகள், கொலைகளைக் கண்டித்

(8-ம் பக்கம் பார்க்க)

## நிவாரண கொடுப்பனவுகள்

[யாழ்ப்பாணம்]

இன்று சனிக்கிழமை இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் காலை 9 மணி முதல் நண்பகல் 1 மணிவரை பின்வரும் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

மீளக்குடியமர்தல் நிவாரணம் ரூபா 1000 [இரண்டாம் கட்டம்]

அரியாலை கிழக்கு, கோண்டாவில் கிழக்கு, திருநெல்வேலி மேற்கு, நல்லூர் வடக்கு, கொக்குவில் மத்தி, கந்தர்மடம், கொக்குவில் கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கொக்குவில் மேற்கு, வண்ணார்பண்ணை வடகிழக்கு, வண்ணார்பண்ணை வடமேற்கு, திருநெல்வேலி கிழக்கு, அரியாலை மத்தி.

மீளக்குடியமர்தல் நிவாரணம் ரூபா 2000. கொழும்புத்துறை, அத்தியடி, சுண்டுக்குழி, குருநகர்மேற்கு, குருநகர் கிழக்கு, யாழ் பட்டினம்' அரியாலை மேற்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு.

உற்பத்தித்திறன் வாய்ந்த நன்கொடைப் பணம் ரூபா 4000. வண். வடமேற்கு, வண். வட கிழக்கு, கந்தர்மடம், நல்லூர் தெற்கு, நல்லூர் வடக்கு, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி கிழக் த கோண்டாவில்மேற்கு, கோண்டாவில் கிழக்கு.

## மா, பாண் விலை அதிகரிப்பு றாத்தல் பாண் ரூ. 5-30!

(மானிப்பாய்)

மா, பாண் ஆகியவற்றின் விலைகளில் மீண்டும்அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்பு எதிர்வரும் 28ம்திகதிதிங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வருமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஒரு கிலோ மாவின் உணவுக் களஞ்சிய விலை 13 ரூபா 45 சதமாகவும், மொத்த விற்பனை விலை 13 ரூபா 80சதமாகவும், சில்லறை விலை 14 ரூபா 25 சதமாகவும் விற்பனை செய்யப்படும்.

பாணின் விலை 5 ரூபா 30 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படிவிலை மாற்ற அறி

(8ம் பக்கம் பார்க்க)

## இன்று

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை பிரதேசத்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் திருத்தியமைத்த வாக்காளர் பதிவேடுகள் 31ம் திகதி அத்தாட்சிப்படுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். தேர்தல் மாவட்டத்தில் 1989ஆம் ஆண்டின் திருத்தியமைத்த வாக்காளர் பதிவேடுகள் இம்மாதம் 31ம் திகதி அத்தாட்சிப்படுத்தப்படவிருக்கிறது என்று யாழ். தேர்தல் மாவட்ட உதவி தேர்தல்ஆணையாளர் திரு. எம். சீ. அருந்ததவச்செல்வம் 'ஈழநாடு' வுக்கு தெரிவித்ததார்:

நாடற்றவர்களுக்குபிரஜாவுரிமை வழங்கும் சட்டத்தின் கீழ் 1989ம் ஆண்டுக்கான வாக்காளர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் சட்டத்தின் கீழ் 1989ம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் சுமார் 4000 பேர் புதிதாக இந்த வாக்காளர் இடாப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள் இதில் 3000பேர் கிளிநொச்சி நிருவாக மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மிகுதி 1000 பேர் யாழ் நிருவாக மாவட்டத்தை சேர்ந்தவர்கள்.

(153)

## சித்த மருத்துவ பரீட்சை முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பரீட்சைகள் 1989 முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. விபரம் வருமாறு:

சித்த மருத்துவ சத்திர சிகிச்சை இறுதி வைத்திய பரீட்சை - 1989 முடிவுகள்.

இரண்டாம் வகுப்பு (மேற் பிரிவு): செல்வி பி. கலைச்செல்வி, செல்வி என். சியாமா செல்வி வி. விவியன்.

இரண்டாம் வகுப்பு (கீழ் பிரிவு): செல்வி சி. திலகேஸ்வரி, செல்வி என். திலகேஸ்

(8ம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவு குதிரைகள் ஏற்றுமதிக்கு தடை!

(நெடுந்தீவு)

நெடுந்தீவிலிருந்து குதிரைகளை ஏற்றுமதி செய்வது விடுதலைப் புலிகளினால் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவின் பாரம்பரிய சொத்தான இக் குதிரையினம் இலங்கையில் இத்தீவில் மட்டுமே உண்டு என்பது குறிப்

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

3 பேஸ் 3 HP, 3 பேஸ் 2 HP மோட்டார்கள், ஸ்ராட்டர்கள், அலுமீனியம் இஸ்பினிங் பொலிசிங் மெசின்கள். யோகின்பிள்ளை, 15/21, மத்தியூஸ் வீதி, (பத்திரிசியார் கல்லூரிக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி 3899)

உற்சவ தேவைக்குரிய விநாயகர், துர்க்கை அம்மன், முருகன் விக்கிரகங்கள் கோவில் பட்டுக்குடை, மணிகள், கொடிக் கம்பங்கள் விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3681)

தங்கள் இல்லங்களில் காலை எழுந்தவுடன் ஈழநாடு பத்திரிகை படிக்க தொடர்பு கொள்ளுங்கள்: ஸ்ரீ முருகன்ஸ் சிவன்கோவில் வீதி, காரைநகர். (சி-3903)

### புலமைப்பரிசில் பரீட்சை - 1990

ஆண்டு 5- புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் 3.00 — 6.00 வரை நடைபெறும். வெளிமாணவரும் பங்கு பற்றலாம். உடன் தொடர்பு கொள்க. எலைற் இன்ஸ்ரிரியூட் (வண்ணை தபாலகம் முன்பாக), 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி-3892)

### தவறிவிட்டது

19-05-90 இரவு கொழும்பு யாழ். மெயில் புகையிரதத்தில் புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்த மோகனபாலன் என்பவர் தனது மணிப்பேசை தவறவிட்டுள்ளார், கண்டெடுத்தவர் தயவு செய்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். இதனுள் முக்கிய சிறிய அளவிலான ஆவணங்கள் உண்டு. தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-3900)

### தேவை

காரைநகரில் வர்த்தக நிறுவனமொன்றிற்கு முகாமையாளர், விற்பனையாளர், கணக்கு லிகிதர் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3902 மே/பா. ஈழநாடு யாழ்ப்பாணம். (சி-3902)

மோட்டார் சைக்கிள் விற்கும் கடைக்கு ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்த பெண் பிள்ளை தேவை. தொடர்புகொள்ளவும்; Our Lady Store, 601, Hospital Road, Jaffna. (சி-3901)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# உதவி அரச அதிபர்கள்
# புனரமைப்பு உதவிப் பணிப்பாளராக நியமனம் பெறுவார்கள்!

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள அனைத்து அரசாங்க அதிபர்களுக்கும் விரைவில் கூடுதலான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படவிருக்கின்றன. அனைத்து உதவி அரசாங்க அதிபர்களும் புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக நல உதவிப் பணிப்பாளர்களாகவும் கடமையாற்றுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சிலவருட காலமாக நாட்டில் இடம்பெற்ற வன்செயல்கள், இனக்கலவரங்கள், இயற்கை அழிவுகள் ஆகியவை காரணமாகப் பொதுமக்களுக்கும், உடைமைகளுக்கும் ஏற்பட்டசேதங்கள் சம்பந்தமாக நஷ்டஈடு கோரி போலியான கோரிக்கைகள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு விடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

புனர்வாழ்வு, புனரமைப்புக் கோரிக்கைகளைச் சிறந்தமுறையில் பரிசீலனை செய்யும் நோக்கமாக அமைச்சின் உதவிப் பணிப்பாளர்களாகவும் எல்லா உதவி அரசாங்க அதிபர்களும் நியமிக்கப்படவிருக்கிறார்கள். (153)

## பரிசாரகர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை வைத்தியசாலையில் மூன்று மாத காலமாக நடைபெற்ற ஆண், பெண் பரிசாரகர் பயிற்சிக்கான எழுத்துப் பரீட்சை நாளை யாழ். தாதிகள் பயிற்சிப் பாடசாலையிலும், செய்முறைப் பரீட்சை நாளை மறுதினம் தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையிலும் நடைபெறவுள்ளது. இதற்கான பிரவேசப்பத்திரங்கள் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் திணைக்கள ஊழியர்களுக்கும் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது


## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி

கௌண்டின்ய
**வ. இரகுராஜசர்மா**
[கோபி]



தோற்றம்: 26-04-65

மறைவு: 30-05-87

பழுத்த அறிஞனைப்போல்
பழகிச் சென்றாயோ மகனே.

அப்பா - அம்மா - அண்ணா
தம்பி - தங்கை.

''செந்திலகம்'',
21, விதானையார் வீதி,
கொழும்புத்துறை. (சி-3895)


# சிறுவர் 'வார்ட்' அமைக்க உதவி கோரப்படுகிறது

(மட்டுவில்)

சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரியில் சிறுவர் 'வார்ட்' ஒன்றை அமைப்பதற்கான உபகரணங்களின் தேவை பற்றி நோயாளர் நலன்புரிச் சங்கமும், ஆஸ்பத்திரி அதிகாரிகளும, பிரிட்டிஷ் சிறுவர் பாதுகாப்பு நிதியத்திடம் பிரஸ்தாபித்துள்ளனர்.

பிரிட்டிஷ் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இலங்கைப் பிரதிநிதியான செல்வி மரியன் பேர்க்கும், யாழ்ப்பாணம் பிரதிநிதி திருமதி கைலாசபதியும் அண்மையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு உத்தியோகபூர்வமான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

தென்மராட்சி நோயாளர் நலன்புரிச் சங்க உறுப்பினர்களும், ஆஸ்பத்திரி அதிகாரிகளும் இப்பிரதிநிதிகளை வரவேற்று உரையாடினர். இந்த உரையாடலின்போது, குழந்தைகளுக்கான வார்ட் அவசியம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் குழந்தைகளுக்கான ஒரு தனி வார்ட் இல்லை. மாதர் வார்ட்டிற்கு அருகாமையில் ஒரு வார்ட்டில் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதேவேளை பிரசவிக்கப்பட்ட குழந்தைகளையும் இதே வார்ட்டில்தான் அனுமதிக்கின்றனர். இதனால் பிரசவித்து சிறிது நாளான குழந்தைகளுக்குப் பாதுகாப்பில்லை. இச்சிசுக்களுக்கு ஒரு தனி வார்ட் இல்லை. உபகரணங்களும் இல்லை.

வெளிநாட்டுத் தாபனம் ஒன்று அண்மையில் வடபகுதியிலுள்ள சகல ஆஸ்பத்திரிகளுக்கும் விஜயம் செய்து; ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான முக்கிய உபகரணங்கள் பற்றிய பட்டியலைத் தயாரித்துள்ளது. குறிப்பிட்ட பட்டியலின்படி பொருள்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (82)


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**மு. சி. சிற்றம்பலம்**
அவர்கள்

| தோற்றம்: | மறைவு: | திதி: |
|---|---|---|
| 02-04-1908 | 18-05-1988 | 26-05-1990 |

சந்தன திருமகன் தணிகா சலன்பதம்
சால துதித்து மகிழும்
சற்குணன் சிற்றம் பலமவன் இங்கெலாம்
சாந்த குணம் இதுதானென
வந்தவர் எவர்க்குமே வாழ வழிகாட்டி
மகிழும் வண்ண நடை ஒழுகு வள்ளல்.

மனைவி, மக்கள்.

வங்களாவடி, வேலணை. (சி-3908)


# நள்ளிரவில் 'அசிட் வீச்சு' பெண்ணும் சிறுமியும்காயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டிலிருந்தவர்கள் மீது இரவுநேரம் திடீரென 'அஸிட்' வீசப்பட்டதால் இருவர் எரிகாயத்திற்குள்ளாயினர்.

இராமநாதபுரத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கனகராணி ரவீந்திரன் (வயது 21) என்ற குடும்பப்பெண்ணும், அவரது பெருமகள் உமாபதி கைலாயநாதன் (வயது 11) என்ற சிறுமியுமே படுகாயமடைந்தவர்களாவர்.

குடும்பத்தகராறு காரணமாக இருமாதங்களாக பிரிந்திருந்த தனது கணவனாலேயே தமக்கு அஸிட் வீசப்பட்டதாக தாம் சந்தேகிப்பதாக தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். [56]

# பதிவாளர் அலுவலகத்திற்கே போலிச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டது!

(மானிப்பாய்)

பிறப்புப் பதிவாளர் அலுவலகத்திற்கே போலிப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கின்றார்கள் என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் யாழ் பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் இடம் பெற்றுள்ளது.

தனது மகனின் பெயர் மாற்றம் சம்பந்தமாக விண்ணப்பித்த தந்தையொருவரிடம் குறிப்பிட்ட சில ஆவணங்களுடன் தந்தையின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தையும் சமர்ப்பிக்குமாறு இத் திணைக்களத்தால் கேட்கப்பட்டிருந்தது.

வேண்டிய ஆவணங்களைச் சமர்ப்பித்த தந்தை தனது பிறப்பத்தாட்சிப் பத்திரத்தைச் போலிச் சான்றிதழில் எழுதி சமர்ப்பித்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. (71)

## மன்னாரில் புலிகளின் பரீட்சார்த்த ஒளிபரப்பு

(மன்னார்)

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி மன்னாரில் பரீட்சார்த்த தொலைக்காட்சி ஒளிபரப்பு ஒன்றை ஆரம்பித்துள்ளது,

தினமும் மாலை 7-00 மணியிலிருந்து மாலை 8-30 மணி வரை இவ் ஒளிபரப்பு நடைபெற்றுவருகிறது.

மன்னாரிலிருந்து எட்டு மைல் சுற்றளவிலுள்ள எல்லா பகுதிகளிலும் இந்த ஒளிபரப்பை பார்க்கமுடியும். (75)

## திருவிழா

(யாழ்ப்பாணம்)

காவலூர் கரம்பன் அன்னை வேளாங்கண்ணி (ஆரோக்கிய மாதா) திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் நவநாள் ஆராதனைகள், மறை உரைகள் ஆகியன நடைபெற்று வருகின்றன இத் திருவிழா 31ந் திகதி நடைபெறும் திருநாள் திருப்பலி, சொரூப திருப்பவனி ஆகியவற்றுடன் நிறைவுபெறுகிறது.

## 85,000 போத்தல்கள்

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டைத் தொகுதி தெங்கு பனம்பொருள் அபிவிருத்திச் சங்கத்தின் சங்கானையிலுள்ள போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலையில் கடந்த ஒன்றரை மாதங்களில் சுமார் 85,000 போத்தல்களில் கள் அடைக்கப்பட்டுள்ளது. (137)

# சோவியத் யூனியன் இன்று சரிந்துவரும் சாம்ராஜ்யமாகத் திகழ்கிறது!

## சர்வதேச ஆய்வு நிலையம் அறிக்கை

(மாஸ்கோ) றது என்றும் இங்கு
சோவியத் யூனியன் விரைவில் குழப்பங்கள்
சரிந்துவரும் சாம்ராஜ்ய ஏற்படலா மென்றும்
மாக திகழ்ந்து வருகி கேந்திர ஆய்வுக்கான

சர்ததேசநிலையம் தெரிவித்துள்ளது.

சோவியத் யூனியனின் எதிர்காலம் பற்றி எவராலும் ஜோஸ்யம் கூறமுடியாது என்றும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

ஜனுதிபதி கோர்பச்சேவ்வின் துரித பொருளாதார சீர்திருத்த கொள்கைகள்தொடர்பாக பொது ஜனவாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படவேண்டும் என்றுசோவியத்அரசு அறிவிப்பதற்கு முன்னர் இந்த சர்வதேச ஆய்வு நிலையம் எழுதியுள்ள மதிப்பீட்டு அறிக்கையில் இவ்வாறு கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

### நம்பிக்கையில்லா தீர்மானம்

இதேவேளை சோவியத் உயர்பீடம் பொருளாதார பெருமாற்றங்களை கொண்டு வரத் திட்டமிட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பொருட்டு அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வேண்டுமென சோவியத் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

விலைவாசியேற்றம் மக்களை கொதிப்படையச் செய்துள்ளது என்றும் மக்கள் வீதி ஆர்ப்பாட்டங்களில் விரைவில் இறங்கலாமென்றும் சிறுபான்மையினரான இந்தச் சீர்திருத்த உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். கொண்டுவரப்படும் மாற்றங்கள் சந்தைப் பொருளாதார கட்டமைப்பை இலக்காகக் கொண்டது என்றும் அவை தற்காலிக துன்பத்தைத் தந்தாலும் எதிகாலச் சமுதாயத்திற்கு அவசியமானவை என்றும் சோவியத் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். (து)

## 28வயது இளைஞரின் சாதனை

(புதுடில்லி)

திருச்சூர் என்ற இடத்தைச் சேர்ந்த லாபீர் என்ற 28 வயது இளைஞர் தமது கைகளை வாயில் குவித்து வைத்துக்கொண்டு பல அரசியல் தலைவர்களின் குரல்களைப்போல் பேசியும், பிரபல திரைப்பட நடிகர்களைப் போல் பேசியும், நடிததும் திரைப்படப் பாடல்களை அதற்குரிய வாத்தியக் கருவிகளின் ஒலியுடன் எழுப்பியும் அனைவரையும் வியப்பிலாழ்த்தி வருகிறர்.

இந்தியாவிலும் அதன் அயல் நாடுகளிலும் இவர் ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளார்.

தொடந்து ஐந்துமணி நேரத்திற்கு எவ்வித தடங்கலுமின்றி மூன்று மொழிகளில் கலை நிகழ்ச்சிகளை நடத்தக்கூடிய இந்த இளைஞரின் உலக சாதனை கின்னஸ் புத்தகத்தில இடம்பெற்றுள்ளது. (து)

## பர்மாவில் 9 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைது!

(ரங்கூன்)

பர்மா எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேலும் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக அரச அதிகாரிகள் அறிவித்துள்ளார்கள்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் தேர்தலில் பங்கெடுக்கும் சில வேட்பாளர்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் அடங்குகிறர்கள்.

இந்தியாவை அடுத்துள்ள எல்லைப்புறத்தில் சட்ட அனுமதியற்ற மாணவர் அமைப்பு ஒன்றிற்கு இவர்கள் நிதி உதவி புரிந்தார்கள் என்று ரங்கூன் வானெலி அறிவித்துள்ளது.

ரங்கூன் சிறைக் கூடங்களில் அரசியல் கைதிகள் ஆயிரம் பேர் வரையில் அடைக்கப்பட்டிருப்பதாக அண்மையில் வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## “இந்தியாவிற்கும் - பாகிஸ்தானுக்கும் மோதல் இடம்பெறுவது சாத்தியம்”

### பிரதமர் பெனுஷிர் பூட்டோ

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் நிலைமையினுல் இழுபட்டுச் செல்லும் பிராந்திய முரண்பாடு தொடர்பாக இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே இராணுவ மோதல் இடம்பெறுவது சாத்தியம்என்று பாகிஸ்தான்பிரதமர்பெனுஸிர் பூட்டோ தெரிவித்துள்ளார். ''போர்தொடுக்கவேண்டுமென்ற அரசியல் நெருக்கடிகள் இருபக்கமும் நிலவுவதால் போர் தவிர்க்க வேண்டியது ஒன்றே'' என்றும் அவர் கூறினர்.

எட்டு இஸ்லாமியநாடுகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பின்னர் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

காஷ்மீர் விவகாரம்தொடர்பாக பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ஒரு தீர்வுகாண வேண்டுமென்பதில் தாம் சென்று வந்த நாடுகள் விரும்புவதாகவும் அவர் மேலும் கூறினர். (து)

## ஒழுக்காற்றுக் கோவை: அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும்அமைச்சர்கள், திட்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர் பதவி வகிக்கும் அரசாங்க ஊழியர்களுக்கான ஒழுக்காற்றுக் கோவைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உயர் பதவி வகிக்கும் இவர்கள் அனைவரும் மக்களின் நம்பிக்கையை பெறும்வகையிலும் அரசின் கௌரவத்தைப் பாதுகாக்கும் விதத்திலும் சிறந்த நடத்தை உள்ளவர்களாக விளங்கவேண்டும் என இந்த ஒழுக்காற்றுக் கோவை மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களின் நலன் கருதி, தமது கடமைகளை நேர்மையாகவும், பாரபட்சமின்றி நிறைவேற்றுவதை இக்கோவை மேலும் வலியுறுத்துகின்றது. சொத்துக்களைப் பிரகடனப்படுத்தியும், தம் வசம் உள்ள ஆவணங்களின் இரகசியத்தன்மையைப் பேணுதல், பொதுச் சொத்தைத் தக்க முறையில் பயன்படுத்துதல், வெளிநாட்டுப் பயணம், வெளி

(5-ம் பக்கம் பார்க்க)

## வன்செயலால் பலியான குடும்ப உறுப்பினருக்கு பயிற்சி ஆசிரியர் நியமனம்

(மட்டக்களப்பு)

வன்செயலால் பலியானவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு பயிற்சி ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு க. சோமசுந்தரம் தெரிவித்தார்.

ஆனுல் பலியானவர்களின் குடும்ப உறுப்பினர் அண்மையில் நடைபெற்ற பயிற்சி ஆசிரியர் தெரிவுக்கான எழுத்துப் பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றியிருக்க வேண்டும்,

இவ்விதம் தோற்றித் தெரிவு செய்யப்படாதவர்கள் தமது குடும்ப உறுப்பினர் வன்செயலால் பலியானதற்கான அத்தாட்சிகளை பொலிசாரிடமும் உதவி அரச அதிபரிடமும் இருந்துபெற்று இம்மாதம் 31ம் திகதிக்கு முன் மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

இத்தகைய விண்ணப்பங்கள் கல்விச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பின் நியமனங்கள் வழங்கப்படும். (121)

## வசதியற்ற கலைஞர்கள் விபரம் சேகரிப்பு

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்திலுள்ள வயதுமுதிர்ந்த வசதியற்ற கலைஞர்களுடைய விபரங்கள் கிராம சேவை அலுவலர்களினுல் திரட்டப்படுகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராம சேவை அலுவலர் பிரிவிலும் உள்ள வயதுமுதிர்ந்த, வசதிற்ற கலைஞர்களின் விபரங்கள் அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்களினுல் திரட்டப்படுகின்றது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இவ்விபரங்களைத் திரட்டி அனுப்பிவைக்குமாறு சகல உதவி அரசாங்க அதிபர்களுககும் சுற்றுநிருபம் அனுப்பிவைத்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (137)

## கண்சிகிச்சை நிலையம்நடத்த கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, வாழைச்சேனை, களுவாஞ்சிகுடி ஆகிய இடங்களில் நடமாடும் கண் சிகிச்சை நிலையங்களை நடத்துமாறு மட்டக்களப்பு சமூக சேவைகள் உதவிப்பணிப்பாளர் ரேட்டரிக் கழகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

மேற்படி திணைக்களத்தினுல் நூறு மூக்குக் கண்ணடிகள் வழங்கப்படவுள்ளன. இவற்றைப் பெறத்தகுதியானேர் கண் வைத்திய நிபுணரின் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

ஆனுல் மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் கண்வைத்திய நிபுணர் இல்லை.

இது விடயத்தில் பொது மககளுக்கு உதவுமுகமாகவே மேற்படி கிளினிக்குகளை நடத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (121)

## யாழ்ப்பாணம் - மட்டக்களப்பில் இரு தலைமை அலுவலகங்கள் இலங்கை வங்கி முடிவு

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பை இலங்கை வங்கி விரும்பவில்லையா என்ற கேள்வி வாடிக்கையாளர் மத்தியில் எழுந்துள்ளது.

மாகாண சபை உருவான பின் மாகாணத் தலைமை அலுவலகங்களை ஒவ்வொரு மாகாணத் தலைநகரிலும் அமைக்க இலங்கை வங்கி தீர்மானித்தது,

இந்தத் தீர்மானத்துக்கமைய இலங்கை வங்கியின் வடக்கு, கிழக்கு மாகாணத் தலைமை அலுவலகம் இன்னமும் திருமலையில் அமைக்கப்படவில்லை.

இதற்குப் பதிலாக இரண்டு தலைமை அலுவலகங்களை மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் அமைக்க இலங்கை வங்கி தீர்மானித்துள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரியில் இவ்வலுவலகங்கள் செயற்படும்.

இதை அடுத்தே வடகிழக்கு இணைப்பை இலங்கை வங்கி விரும்பவில்லையா? என்ற கேள்வி எழுந்துள்ளது. (121)

## வடமராட்சியில் கோழி வளர்ப்போருக்கு கடனுதவி கிடைக்கும்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் கோழி வளர்ப்பில் ஈடுபடுபவர்களுக்கு கடன் உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் மேற்கொண்டுள்ளது

சங்கத்தால் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களுக்குக் கோழி வளர்ப்பிற்கு முதல்கட்டக் கடனுக 2,000 ரூபா வழங்கப்படவுள்ளது. இப்பணம் புலோலி கூட்டுறவுக் கிராமிய வங்கி முகாமையாளரால் அங்கத்தவர்களின் சேமிப்புக்கணக்குப் புத்தகத்திலிடப்பட்டு வழங்கப்படும். இப்பணத்தை கொண்டு கோழி வளர்ப்பாளர்கள் கோழிக் கூட்டை அமைத்துக்கொள்ளவேண்டும். அது அமைக்கப்பட்ட பின்னர் இரண்டாம் கட்டக் கடனுதவியாக 1,500 ரூபா 40 கோழிக் குஞ்சு, கோழித்தீன் உபகரணங்கள் கொள்வனவு செய்ய வழங்கப்படும். பின்னர் மிகுதிக் கடனுக 500 ரூபா வழங்கப்படும்.

கடன்பெற்ற 6 மாதம் தொடக்கம் மாதாந்தம் 4வீத வட்டியும் முதலும் என்றரீதியில் 48 மாதங்களுக்குள் புலோலி கிராமிய வங்கியில் உள்ள சங்கச் சேமிப்புக் கணக்கு இலக்கம் 6147ல்கடன் பெற்றவர் கடன்கட்ட ஒப்புக்கொள்ளவேண்டும். யாழ். மாவட்டத் திட்டமிடல் பகுதி இதற்கென வடமராட்சி கால்நடைவளர்ப்போர் சங்கத்திற்கு ஒரு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. (152)

### மணிவாக்கு

நித்தியமாயும் சித்சொரூபியாயும் சாந்த சொரூபியாயும் ஆத்ம ஞானத்தால மாத்திரம் அறியக்கூடிய ஜோதியை வணங்குவோமாக.

— பர்த்ருஹரி நீதி.

## நமது நோக்கு

# நியமனங்களில் தாமதம் ஏன்?

யாழ். மாவட்டக் கல்வித் திணைக்களத்தின் ஆளணி நிர்ணயம் பற்றிச் சில நாட்களுக்குமுன் இங்கு குறிப்பிட்டிருந்தோம்.

வடபிராந்திய வன அலுவலகத்தில் ஏற்கனவே உள்ள ஆளணிக்குரிய வெற்றிடங்கள் பல ஆண்டுகளாக நிரப்பப்படாமல் இருப்பது பற்றிய செய்தி வந்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களின் வன அலுவல்களுக்குப் பொறுப்பானதே இந்த அலுவலகமாகும்.

வன அலுவலர்கள், வனபாலகர்கள், எழுதுவினைஞர்கள் ஆகியோரது பல வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன.

வனபரிபாலனம் இதனால் பாதிப்படைந்துள்ளது; இதன் தாற்பரியம் என்ன?

வடபகுதி வனப்பகுதிகள் பாதுகாக்கப்படவேண்டியவையல்ல என்ற எண்ணம் எங்காவது உருவாகியுள்ளதா?

சுற்றுடற் பாதுகாப்புப்பற்றி உலகெங்கும் புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது; கோடிக்கணக்கிற் பணத்தை செலவழித்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருக்கிறார்கள்.

வனங்கள் அழிக்கப்படுவதால் மழைவீழ்ச்சி குறைந்து குடிநீர்ப் பற்றாக்குறையே ஏற்படும் ஆபத்தும் உண்டாகலாம் எனப் புவியியலாளர்கள் எச்சரித்து வருகிறார்கள்.

இந்த நிலையில், ஏற்கனவே பல வழிகளாலும் பாதிக்கப்பட்ட வனங்களைப் பாதுகாக்க உரிய திணைக்களம் அதற்குரிய அலுவலர்களை நியமிக்காதிருப்பதன் காரணம் புலப்படவில்லை.

இதேவேளை அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றிலே உள்ள பல பதவி வெற்றிடங்களுக்கு மூன்று மாத கால எல்லைக்குள், புதியவர்களை நியமனம் செய்யப் பொதுநிர்வாகமாகாணசபை அமைச்சு முடிவுசெய்துள்ளதாகத் தெரியவருகிறது.

போட்டிப் பரீட்சை நடாத்தப்படுமென்றும், தகுதி வாய்ந்தவர்கள் திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்கள் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

வேலையில்லாத் திண்டாட்டத்தால் விரக்தியுற்ற சமுதாயம் உருவாகி வருகின்றது. தகுதியற்றவர்களின் நியமனங்கள் பல ஊழல் புகார்களுக்கு இடமளித்து வருகின்றன.

ஏற்கனவே பயிலுனர் ஆசிரியர் நியமனங்கள் பற்றிப் பல்வேறு பிரசாரச் செய்திகள் வந்து, இளைஞர்களும் யுவதிகளும் பரபரப்படைந்து பரீட்சைகள் எழுதி, நேர்முகத் தேர்வுகளுக்குச் சென்று, புள்ளிகள் பெற்றும் புறக்கணிக்கப்பட்ட கதைகள் பல இன்னும் வந்துகொண்டிருக்கின்றன.

வெற்றிடங்கள் பலவும் உடனடியாக நிரப்பப்படவேண்டும்; அதேவேளை எந்தவித ஊழல் புகார்களுக்கும் இடம்கொடுக்காதவகையில், தீவிர கண்காணிப்புடன் நியமனங்களை வழங்கி, அரசு தனது நற்பெயரைக் காப்பாற்றவேண்டும்.

[இன்று அல்லைப்பிட்டி
சம்பிலிப்பு நேரியார் தேர்]

# வேதத்தைக் காத்திட்ட வித்தகனே!

வேதத்தைக் காத்திட்ட வித்தகனே—உந்தன்
பாதத்தைத் தொட்டேநாம் முத்திசெய்தோம்.

அன்று கத்தோலிக்கம் பொன்றிடாமல்
குன்று எனநின்று அதைக் காத்தவனே!
சம்பிலிப்பு நேரி சரணம் ஐயா! எங்கள்
சத்தியவேதம் உன்சரணம் ஐயா.

இன்ஞசியாரைப்போல் சவேரியார்போல்
எம்மறை காத்திட்ட சம்பிப்பே!
உன்ஞசிதன்னை நாம் இரந்தோம் ஐயா!
உரோமாபுரியின் அப்போஸ்தவரே!

ஆழித்தொழில் இங்கே ஆக்கமுற, எங்கள்
அல்லைநல்லூரில் பனைசெழிக்க
மேழித்தொழில் இன்னும் மேன்மையுற
மேவுமுன் பாதத்தை நாம் பணிந்தோம்;

—அல்லைப்பிட்டி அந்தோனிப் பண்டிதர்

# பல்கலை வல்லான் பல்லாண்டு வாழ....!

சிறுகதை எழுத்தாளர் ஒருவருக்கு மணிவிழா. நாடகாசிரியர் ஒருவருக்கு மணிவிழா. கவிஞர் ஒருவருக்கு மணிவிழா. நாவலாசிரியர் ஒருவருக்கு மணிவிழா. சமய இலக்கிய கர்த்தா ஒருவருக்கும் மணிவிழா. ஆய்வாளர் ஒருவருக்

பிரபல எழுத்தாளரும், இலக்கியவாதியுமான திரு. சொக்கன் அவர்களின் மணிவிழா முன்னோட்டமாக இக்கட்டுரை வெளியாகின்றது.

கும் மணிவிழா. ஆக இன்னோரன்ன பல்துறை எழுத்தாளர்களுக்கு மணிவிழா என்றால் ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஆனால் உண்மையில் ஒருவருக்கே இந்த மணிவிழா என்றால் இலக்கியவாதிகளிடையே வியப்பு அடைவதற்கு ஒன்றுமில்லை.

காரணம்?

பல்துறை இலக்கியகர்த்தா 'சொக்கன்' என்கின்ற சொக்கலிங்கம் அவர்களுக்கே இவ்விழாவாகும்.

இதுவரை காலமும் தனது எழுத்தாற்றல் மூலம்தான் ஒரு

வண்ணை
**சே. சிவராஜா**

முதிர்ச்சி எழுத்தாளர் என நிருபித்து வந்த சொக்கன் அவர்கள் இன்றுடன் அகவை 60 பூர்த்தியாவதன் மூலம் கால ரீதியாகவும் முதிர்ச்சிநிலை அடைகின்றார்.

சுமார் 15 வயதில் எழுத்துலகில் மாணவனாக அடி எடுத்து வைத்த சொக்கன் அவர்கள், கடந்த 45 வருடங்களுக்கு மேலாக இலக்கிய உலகில், அவர் தொடாத துறையுமில்லை. துலங்காத கலையும் இல்லை எனலாம்.

இலக்கியத்துறையில் எவருமே தொடாத—தொடமுடியாத—துறைகளையும் துணிந்து தனது கைவண்ணத்தின் மூலம்தான் ஒரு பூரணமான இலக்கியகர்த்தா— இலக்கிய வாதி என்பதை நிருபணமாக்கியவர் சொக்கன் அவர்கள்.

தனது சிறிய பராயத்தில்; வண்ணை -நீராவியடியில் வாழ்ந்த காரணத்தினால் அன்னாரை எனது மூத்த சோதரனாக நோக்குகிறேன். அன்னார் அன்றும் இன்றும், ஆரம்ப எழுத்தாளர்களுக்கும்—வளர்ந்துவரும் எழுத்தாளர்களுக்கும் ஆக்கமும், ஊக்கமும் தந்ததோடு, சிறந்த வழிகாட்டியாகவும் இருந்து வந்துள்ளமை கண்கூடாகும்.

எழுத்தாளர் மட்டத்தில் ''காய்ச்சல்'' உண்டென்பது இலக்கிய உலகம் நன்கறியும். ஆனால் சொக்கன் அவர்கள் இதற்கு மாறுபட்டவராகும். எந்த இலக்கியக் கூடாரத்திற்குள்ளும் அவர் தன்னை இனங்காட்ட விரும்பவில்லை. ஏனெனில் அவர் முகமூடி விளையாட்டுக்களை விரும்பாதவர். அவர் அனைவரையும் அணைத்தெடுத்து, தான் ஒரு உண்மையான இலக்கியவாதி மட்டுமல்ல; உண்மையான வழிகாட்டியுமென நிருபித்துவந்துள்ளார். கனிஷ்ட எழுத்தாளர்களின் கலங்கரை விளக்காகவும் விளங்கிவந்துள்ளார் என்றால் மிகையாகாது.

இவர்கள் பல துறைகளிலும் பரிசுகள் பல பெற்றதோடு. பெரு மதிப்புக்குரிய சாகித்திய மண்டலப் பரிசையும் தனது 'ஈழத்து தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி' என்ற நூலுக்குப் பெற்று, சிறந்த ஆராய்ச்சியாளர் என்பதையும் நிலைநாட்டியுள்ளார். மேலும் 'கடல்' என்னும் சிறுகதைத் தொகுதிக்கும் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலக்கியமா? சமயமா? அல்லது பாடசாலை நூல்களா? இவை அனைத்தையும் தனது கைவண்ணத்தால் மெருகிடச் செய்தவர் சொக்கனாகும்.

சமய மேடைகளிலும், பட்டிமன்றங்களிலும் இவர் ஆதவனாய்க் கதிர் வீசியபோதும், தமது தலையை நிமிர்த்தித் 'தலைக்கனத்தை' காட்டாமை இவரது பெருந்தன்மையையே காட்டுகின்றது.

சிறந்த இலக்கிய கர்த்தாவான இப்பெரியார், அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றபின் தொடர்ந்தும் தனது இலக்கியச் சேவையை ஈழத் தமிழ் மக்களுக்கு அளிப்பதோடு, இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டியாகவும் அமையவேண்டும்.

# வங்கிகளில் ஊழியர் பற்றாக்குறை!

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக்கிளைகளில் வாடிக்கையாளர்களுக்கு ஊழியர்கள் பற்றாக்குறையினால் சிறந்த சேவையாற்ற முடியாமல் இருப்பதுடன் மூடப்பட்ட மக்கள் வங்கிக்கிளைகளைத் திறக்க முடியாமலுமுள்ளது என்று யாழ். மக்கள் வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில் 1983-ம் ஆண்டுக்குப்பின்பு வேலையிலிருந்து இளைப்பாறியவர்கள், இறந்தவர்கள் ஆகியோரின் இடங்களுக்கு இதுவரை புதிய நியமனங்கள் இடம்பெறவில்லை என்றும் இதனாலேயே வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவையாற்ற முடியாமல் இருப்பதுடன் மூடப்பட்ட மக்கள் வங்கிக்கிளைகளைத் திறக்கமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது என்றார். (137)

★ நாளை உற்சவம் ஆரம்பம்

### வட்டுக்கோட்டை மேற்கு அருண்மிகு

# சின்னக்கதிர்காமம்

ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன் வட்டுக்கோட்டை மேற்கில் வாழ்ந்து வந்த சின்னட்டியார் என்னும் செம்மனச்செல்வர் சைவாசார சீலர்களில் சிறந்து விளங்கினார். யாழ்ப்பாணத்தில் நிலைபெற்றிருந்த கந்தபுராண கலாசாரத்தில் நிலைபெற்றிருந்தார்.

அவர் தமது இல்லத்தில் வேல் ஒன்றையும் வைத்து வழிபாடியற்றும் நியமம் உடையவராயும் இருந்தார். தமது தலைமகனுருக்கு முருகன் திருநாமத்தைச் சூட்டினார்.

ஒரு முறை கதிர்காமத்தில் ஆலய கப்புறளை இவருக்கு ஒரு வேலை வழங்கி ஆசீர்வதித்தருளினார். ஊர் திரும்பிய அவர் அத்தங்க வேலையும் தாம் அமைத்திருந்த திருக்கோவிலுள்ளே தாபிதது வழிபாடியற்றிவந்தார். இக்காலப்பகுதியில் வெற்றிவேலருக்குப் பல சித்தர்களின் தொடர்பு கிடைத்தது. குறிப்பாகக் குஞ்சுப்புரி நவநாத சித்தரைக் கூறவேண்டும். சித்தர் இயந்திரப் பேழை ஒன்றை நல்கி இஃது எல்லாம் தரும் என்று ஆசீர்வதித்தார்.

1947-ல் கோவில் புதுப் பொலிவுடன் அமையலாயிற்று.

ஊரார் அன்பர் அடியார் உதவியும் ஒத்துழைப்பும் நல்கினர். திருப்பணி முன்னேற்றம் கண்டது. தொடர்ந்து வெற்றிவேலனின் மகன் நல்வேல்நாதன் திருக்கோயில் திருப்பணிகளை செவ்வனே இயற்றிவருகிறார்.

நாள் வழிபாடும் சிறப்பு வழிபாடும் விசேட வழிபாடும் இனிதே நடைபெற்றுவருகின்றன. கதிர்காமத்தை ஒப்ப இங்கும் வாய்கட்டிப் பூசை செய்யும் வழக்கமே பின்பற்றப்படுகின்றது மகோற்சவம் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. அது தீர்த்தோற்சவத்துடன் நிறைவெய்துகின்றது அன்று அன்னதானம் வெகு சிறப்பாக இயற்றப்படுகின்றது.

வட்டு. சின்னக் கதிர்காமத்தில் கந்தஷஷ்டி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. 1925-ம் ஆண்டு முதல கந்தபுராண படனம் மரபுநிலை திரியாதவாறு நடாத்தப்பட்டுவருகின்றது.

-ஓர் அடியவர்

## பலதும் பத்தும்

### அந்தப் பாரத்தை எப்படித் தூக்கினார்?

சோவியத் நாட்டைச் சேர்ந்த லிப்தியா லிய்சோவா என்ற பெண் பாரம் தூக்கும் பயிற்சி செய்கிறார். 700 கிலோ பாரத்தைப் பல தடவை தூக்குகிறார்.

இதை எவ்வாறு செய்ய முடிகிறது......? யோகாசனப் பயிற்சி செய்துவருவதாக அவர் கூறுகிறார். யோகாசனத்தின் பெருமை அந்த நாட்டுக்கும் போயியிக்கிறது......! ஆனால்...... இங்கு......?

மூன்று மாதத்திற்கு ஒரு தடவை பத்துத் தினங்களுக்கு இவர் உண்ணாவிரதம் மேற்கொள்கிறார் எமது சமயத்திலே, இன்று விரதம் இருப்பவர் எத்தனைபேர்...?

இவருக்கு இந்தளவிற்கு உடல்வலுதரும் உணவு வகைகள் எவை தெரியுமா? மரக்கறி வகைதான்...!

கோர்ணல் பல்கலைக்கழக விஞ்ஞானி கொலின் காம்பெல் உணவுப் பழக்கங்கள் பற்றி ஆய்வுசெய்து வருகிறார்

இறைச்சி, மாமிச உணவுகளே பல நோய்களுக்குக் காரணமாம்...! தாவர உணவுண்பவர்களை... இருதய நோய்கள், புற்றுநோய்கள், நீரிழிவு ஆகியன தாக்கும் வாய்ப்புக் குறைவாம்!

''உண்ணாமை வேண்டும் புலால் பிறிதொன்றன்
புண் அது உணர்வார்ப் பெறின்!'' —குறள்.

இதனை ஆண்டாண்டு காலமாகக் கற்றதினால் என்ன பயன்? அயர்கள் ஆராய்ந்து சொல்லித்தான் தெரியவேண்டிய பரிதாபநிலை...... நமக்கு...!

வாணி

### பாராளுமன்றத்தில்

# "அரசுமீது விடுதலைப்புலிகள் நம்பிக்கை இழக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது!

## மீண்டும் தாக்குதல் மூண்டால் இளைஞர் ஆயுதம் ஏந்தி போரிடலாம்"

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கம், ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா மீது பூரண நம்பிக்கை வைத்துள்ளது போலவே ஜனாதிபதி பிரேமதாசா, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது பூரண நம்பிக்கை வைத்தே பேச்சுவார்த்தை நடத்திவருகிறார் என்று பாதுகாப்புராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

பாராளுமன்றம், நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகமது தலைமையில் கூடியது.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பது சம்பந்தமான பிரேரணையைச் சுற்றுடல் பாதுகாப்பு அமைச்சர் திரு. வின்சன்ற் பெரேரா முன்வைத்தார்.

### வடக்கு-கிழக்கு நிலைமை

எதிர்க் கட்சியினர் சார்பில் விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய திரு. ரி.பி. குலரத்ன; மட்டக்களப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சாம் தம்பிமுத்துவின் மறைவுக்கு காரணமானவர்கள் கொழும்பில் நடமாடி வருவதாகவும், இவர்கள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி, தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கூறினார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் வடக்கிலும், கிழக்கிலும் தன்னிச்சைப்படி நடக்க அரசாங்கம் இடமளித்துள்ளது என்றும் அவர் கண்டித்தார்.

சபையில் பேசிய சிறிலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர்கள் பலரும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களின் நிலை என்ன? அவர்கள் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள்? என்று அரசாங்கம் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

### ரஞ்சன் பற்றி சபாநாயகர்

சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகியவுடன் சபையில் விடுதலைப் புலிகள் தொடர்பாக எதிர்க் கட்சிகள் கேட்ட கேள்விகளுக்கு "என்னால் பதில் அளிக்கமுடியாது" என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் மறுத்தமை பாராளுமன்ற வரலாற்றிலேயே ஒரு கவலைக்குரிய விடயம் எனவும் அமைச்சர் தனிப்பட்ட முறையில் தனது விருப்பத்தின் பேரில் நடந்துகொள்ளலாம். ஆனால் சபைக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற நிலையில் வருவதென்றால், சபைக்குரிய கௌரவத்தைக் கொடுக்க வேண்டும் எனறும் சபாநாயகர் கூறியதும், எதிர்க்கட்சியினர் ஆரவாரம் செய்து அதனை வரவேற்றனர்.

பாராளுமன்ற அமர்வின் போது, ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாசா சபையின் நடவடிக்கைகளை அவதானித்துக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### வடக்கு-கிழக்கில் தொடர்ந்து பதற்றம்

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. மாவை சேனாதிராசா வடக்கு-கிழக்கு மாகாணத்தின் இன்றைய நிலை குறித்து எடுத்துவிளக்கினார்.

பொதுமக்கள் இன்னும் சமாதானத்தின் நிழலில் வாழக்கூடிய நிலை உருவாகவில்லை என்று அவர் கூறினார்.

''பதற்றத்துடனேயே மக்கள் வாழும் நிலை உண்டு. அரசாங்கப் படைகள் மீண்டும் தாக்குதல்களை மேற்கொள்ளுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தவேண்டும்.

அரசாங்கத்தின்மீது விடுதலைப் புலிகள் நம்பிக்கை இழந்து வரும் சூழ்நிலை உருவாகியுள்ளது. அஹிம்சை முறையில் நாம் நம்பிக்கை கொண்டிருந்தாலும், ஆயுதபடைகள், தமிழ் மக்களைத் தாக்கும் சூழ்நிலை உருவாகினால் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போரிடும் நிலையே மீண்டும் ஏற்படும். விடுதலைப் புலிகள் மற்றும் போராளிகளின் தியாகங்களுக்கு மாகாண சபை ஒரு பரிசாக அமைய மாட்டாது'' என்று திரு. மாவை சேனாதிராஜா கூறினார்.

### முஸ்லிம்கள் நிலை

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம்.எல்.ஏ. ஹிநபுல்லா பேசுகையில், அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் ஒரு யாப்பாக, அரசியல் சட்டத்துக்குள் சேர்த்துக்கொண்டால், பொருத்தமாக இருக்கும் என்றார்.

''வடக்கு கிழக்குப் பகுதிகளில் சட்டமில்லை. சமாதானமுமில்லை. கடந்த வாரம் கல்முனையில் முஸ்லிம் இளைஞர்கள் விடுதலைப் புலிகளினால் இம்சைப்படுத்தப்பட்டார்கள். இது குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வடக்கிலும், கிழக்கிலும் வாழும் ஐந்து லட்சம் முஸ்லிம்களை ஐயாயிரம் விடுதலைப் புலிகள் வசம் அரசு ஒப்படைத்துவிட்டதா? முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரத்தை விடுதலைப் புலிகளிடம் முஸ்லிம்கள் வழங்கவில்லை'' என்றும் அவர் குரல் எழுப்பினார்.

ஐக்கிய சோஷலிசக் கட்சியைச் சேர்ந்த வாசுதேவா நாணயக்காரா பேசுகையில்:– ''சமீபத்தைய அரசாங்கத்தின் தேடுதல் நடவடிக்கைகளின்போது காணமல்போனவர்களின் குடுமபங்களுக்கு ஜனசவிய உதவிகள் வழங்கப்படவேண்டும் அரசாங்கத்தின அனுதாபத்தைபெறவேண்டிய மககளுக்கு சேவை செய்ய வேண்டியது அரசின் முக்கிய பணி. இவ்வாறு காணமல் போனவர்கள் யார்? அவர்களுக்கு என்ன நடந்தது என்பனவற்றை விசாரணை செய்வதற்கு பாதுகாப்பு ராஜாங்க அமைசசர் விசாரணை குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.'' என்றும் அவர் கூறினார்.

### புலிகளுக்கு அதிகாரம்?

மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பந்துல குணரத்ன பேசுகையில்; இலங்கையில் வாழும் சிங்கள மக்களில் பலர், அரசாங்கத்தின் கொள்கைகள் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர். விடுதலைபுலிகளுக்கு வடக்கிலும, கிழக்கிலும் அரசாங்கம் அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு, இன்று திண்டாடுகிறது'' என்றார்.

பகல் போசன இடைவேளையின் பின்னர் சபை மீண்டும் கூடியபோது, பிரதி சபாநாயகர் திரு. காமினி பொன்சேகா தலைமை தாங்கினார்.

### மலையக இளைஞர்கள்

ஈரோஸ் உறுப்பினர் திரு. இராமலிங்கம் உரையாற்றுகையில், ''ஜனநாயக வழிமுறைக்கு வந்து கொண்டிருக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்தினரை மீண்டும் பழைய நிலைக்கு தள்ளக்கூடிய விதத்தில் அரசாங்கம் செயற்படக்கூடாது. மலையக இளைஞர்களை முறையாக வழிநடாத்த வேண்டும் இல்லாது விட்டால் அவர்கள் தவறான முறையில் வழிநடாத்தப் படக் கூடும். மலையக மக்கள் இரண்டு முக்கிய பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒருலட்சத்துக்கும் அதிகமான மக்கள் நாடு கடத்தப்பட வேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரச்னையை அரசாங்கம் சுமுகமாகத் தீர்க்க வேண்டும். காணிப்பங்கீடு விடயத்தில் மலையக மக்களின் அபிலாஷைகளை அரசாங்கம் பூர்த்தி செய்ய வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

### பிரேமச்சந்திரன் கண்டனம்

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தைச் சேர்ந்த திரு. பிரேமச்சந்திரன் உரையாற்றும் போது; ''வடக்கு – கிழக்கு மாகாணங்களில், வரிவிதிப்புகளும், ஆட்கடத்தல்களும், இடம்பெற்று வருகின்றன. வவுனியாவில் ஜனசவிய திட்டம் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் ஆசிரியர் நியமனம், வழங்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு பகுதிகளில் இன்று நிலவும் சூழ்நிலையில் மாகாணசபை தேர்தல்களை நடாத்துவது சாத்தியமற்றது. அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைகள் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்ந்து நீடித்து நடைபெறுகின்றதேயொழிய எதுவித சுமுக நிலையும் ஏற்படவில்லை'' என்றார்.

### அரசுபற்றி வர்ணனை

மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திரு. குணவர்த்தன உரையாற்றுகையில்; ''அவசரகாலச் சட்டத்தினால் உயிர் வாழும் அரசாங்கம் இது! எதுவித காரணமும் இன்றி இளைஞர்களை கைது செய்யும் அரசு இது! உலக வங்கியின் அடிமை அரசுஇது!'' என்று வன்மையாக சாடினார்.

### முஸ்லிம்களுக்கு புலிகள் எதிரல்ல

ஈரோஸ் உறுப்பினர் திரு. ரட்ணராஜா தமது உரையில்; 1958–ம் ஆண்டு முதல் தமிழ் மக்கள் இனரீதியில் நசுக்கப்பட்டுவருவதை 'ஹன்சார்ட்'டை மேற்கொள் காட்டி விளக்கினார்.

''இனப்பிரச்சனை நீண்டகாலமாக தேசியபிரச்சனையாகிவிட்டது. இதனைமாற்றி சுமுகமான நிலையை உருவாக்க ஜனாதிபதி முயன்றுவருவது வரவேற்கத்தக்கது. முஸ்லிம் மக்களுக்கு விடுதலைப்புலிகள் எதிரானவர்கள் அல்ல'' என்றும் அவர் கூறினார்.

சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸின் தலைவர் ஜனாப் எம். எஸ். அஸ்வர் பேசுகையில் ''வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள், தனித்துவம் வாய்ந்தவர்கள். வடக்கு கிழக்கில் வாழும் இந்த முஸ்லிம் மக்கள் நியாயமான முறையில் நடாத்தப்படாது விட்டால், ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்படும். முஸ்லிம் மக்கள் அரசாங்கத்தின் பகடைக்காய்கள் அல்ல வடக்கும் கிழக்கும் இணைவதானால் அதில் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும். கிழக்கு மாகாண முஸ்லீம்கள் பிரிந்து வாழும், நிலையை உருவாகவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்'' என்றார்.

### முஸ்லிம் மக்கள் மதிக்கப்படவேண்டும்

''விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு மக்கள் முன் சென்று தேர்தலில் நிற்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரிப்பது எனது நோக்கம் அல்ல. முஸ்லிம் மக்கள் மதிக்கப்படவேண்டுமென்பதே எனது ஆவல்'' என்று தெரிவித்தார் அஸ்வர்.

''கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் அங்கு சென்று எனது பணிகளைத் தொடர முடியவில்லை என்று அரசாங்கத்துக்கு மிகுந்த வேதனையு

(7-ம் பக்கம் பார்க்க)

---

# தென்மராட்சியில் பாலர் கல்வி நிலையம்

(யாழ்ப்பாணம்)

அறவழிப் போராட்டக்குழுவினால் தென்மராட்சியில் பாலர் கல்விக்கான மூலவள நிலையம் ஒன்று ஆரம்பிக்கப் படவுள்ளது.

இம் மூலவள நிலையம் தொடர்பான ஆக்கபூர்வமான கருத்துக்களைத் திரட்டும்பொருட்டு பாலர் கல்வியுடன் தொடர்புடையவர்களை உள்ளடக்கிய கலந்துரையாடலொன்று அடுத்த மாதம் 7–ம் திகதி அறவழிப் பணிமனையிலுள்ள காந்தி நினைவரங்கில் திரு. கே. கோபாலகிருஷ்ணன் தலைமையில்நடைபெறவுள்ளது.

தமிழ் பிரதேசத்தில் முதன்முதலாக நிறுவப்படவிருக்கும் இந்த மூலவள நிலையத்தில் பாலர் கல்வி தொடர்பான பாடத்திட்டம் மாதிரி வகுப்புகள், பயிற்சிகள், கலந்துரையாடல்கள், புத்தகக் கண்காட்சி, விளையாட்டு நிகழ்ச்சிகள், படக் காட்சிகள் என்பன நடைபெறவுள்ளன.

இதற்கானஏற்பாடுகளை இக்குழுவின் செயலாளர் திரு. க ஜீவகதாஸ் மேற்கொண்டு வருகிறார்.

---

### "வைத்தியசாலைகளில்

# நிர்வாகச் சீர்கேடுகள் இடம்பெற ஒருபோதும் அனுமதியளிக்கக்கூடாது"

## வடமராட்சிப் பொறுப்பாளர் குணம் கருத்து

(பருத்தித்துறை)

'வைத்தியசாலைகளில் நிர்வாக சீர்கேடுகள், ஒழுங்கீனங்கள் இடம் பெறுவதற்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. நோயாளர் நலன் புரிச்சங்கங்கள் நோயாளர்களின் நலன்களைப் பேணி அவர்களுக்கு உதவக்கூடிய முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சுகாதாரத் திணைக்கழகமும் வைத்தியசாலை நிர்வாகச் சீர்கேடுகள் பற்றுக்குறைகள், சுகாதாரசீர்கேடுகளை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.'

மேற்கண்டவாறு, பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலை (மந்திகை) நோயாளர் நலன்புரிச் சங்க ஆலோசனைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி பொறுப்பாளர் திரு குணம் குறிப்பிட்டார்.

புலோலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய திரு. குணம் குறிப்பிட்டதாவது:

வைத்தியசாலைகள் மிகமுக்கியத்துவம் வாய்ந்த அத்தியாவசிய சேவைகளை மக்களுக்கு வழங்க வேண்டிய நிலையில் உள்ளன. வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு சிறந்த வைத்திய சேவைகள் வழங்கப்படவேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர். வைத்திய சேவைகளை மேற்கொள்ளும் வைத்திய சேவையாளர்கள் தமது முக்கியத்துவம் வாய்ந்த தூய்மையான வைத்திய சேவைகளை ஒழுங்காக மேற்கொள்ள வேண்டும் வைத்திய சேவையாளர்கள் ஒழுங்கீனமான முறையில் செயல் படுவதற்கு எவரும் அனுமதியளிக்க மாட்டார்கள்.

வைத்திய சேவைகளை வழங்க சந்தர்ப்பம் கிடைத்தது அரிய சந்தர்ப்பம் என்பதை வைத்திய சேவையாளர்கள் மறந்து விடக்கூடாது. இப்புனித பணியைச் சிறப்பாக மேற்கொள்ளும் வைத்திய சேவையாளர்கள் வாழ்க்கையில் பூரண திருப்தியும் அடைந்து மகிழ்ச்சியடைவர். சில வைத்திய சேவையாளர்கள் கடமைகளில் கவனம்செலுத்தாது ஏனோ தானோ என்ற மனப்போக்குடன் செயற்பட்டு வருவதாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது மிகக் கவலைக்குரியதாகும், கண்டனத்திற்குரியதாகும்.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மருத்துவக் குழுவைச் சேர்ந்த பல உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

(52)

---

### ஒழுக்காற்றுக்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளில் நடந்துகொள்ளும் முறைகள் என்பன குறித்து அமைச்சர்கள் முதல் அனைவரும் பின்பற்றவேண்டிய வழிமுறைகள் விளங்கப்படுத்தப் பட்டுள்ளது.

(அ)

### வலிகாமம் மேற்கில்

# திருமணமாகாத பெண்கள், விதவைகள், அனாதைகள் விபரம் சேகரிப்பு

[சித்தன்கேணி]

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்கஅதிபர் பிரிவிலுள்ள 25 கிராமசேவை அலுவலர்கள் பிரிவிலும் அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்களினுல் திருமணமாகாத இளம் பெண்கள், விதவைகள் அனாதைகள் ஆகியோரின் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றது.

வடக்கு கிழக்கு மாகாண சபையின் திட்டமிடல் இளைஞர் விவகார மனிதவள அமைச்சு விதவைகள் திருமணமாகாத பெண்கள், அனாதைகள் ஆகியோரின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கான திட்டங்களைத் தயாரித்து வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்துவதற்காகவே இந்த விபரங்களை சேகரித்து அனுப்புமாறு சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பி வைத்துள்ளது.

18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட திருமணமாகாத இளம் பெண்கள் விதவைகள் ஒரு வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட அனாதைகள் ஆகியோரின் விபரங்களே கிராமசேவை அலுவலர்களினுல் திரட்டப்படுகின்றது. (137)

# ரசாயனத் தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைக்க ஏற்பாடு!

## ஜூன் 3-ல் தலைவர் விஜயம்

(மட்டக்களப்பு)

பரந்தன் ரசாயனக்கூட்டுத்தாபனத்தின்தலைவரான திரு. உபாலி த.சில்வா யூன் மாதம் 3-ம் திகதி பரந்தனுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கடந்த 6 வருடங்களாக இயங்காதிருக்கும் மேற்படி தொழிற்சாலையை யூன் மாதத்தில் மீண்டும் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை ஆராயுமுகமாகவே தான் அங்கு செல்வதாக திரு. உபாலி த சில்வா மட்டக்களப்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது கொழும்பிலிருந்து பொறியியலாளர் குழு ஒன்று இம்மாதம் பரந்தனுக்குச் செல்கிறது. அங்கு ஆய்வுகளை மேற்கொள்ளும் குழுவினர் 3-ம் திகதி தமது அறிக்கையினைத் தலைவரிடம் சமர்ப்பிப்பர்.

சுமார் 50 லட்சம் ரூபா செலவில் பொயிலரும் கொம்போஷரும் திருத்தப்பட்டுள்ளன. எஞ்சிய வேலைகளுக்கு இன்னும் 50 லட்சம் ரூபா தேவைப்படும் என்று தெரிகிறது.

இப்போது தொழிற்சாலையில் 306 உத்தியோகத்தர்களே கடமையாற்றுகின்றனர். இன்னும் 490 உத்தியோகத்தர்கள் தேவைப்படுகிறது.

தொழிற்சாலை இயங்கத் தொடங்கியதும் நாளொன்றுக்கு 5 மெட்றிக்தொன் குளோறின் உற்பத்தியாகும். இதை அடுத்து வாழைச்சேனை காகித ஆலையிலும் உற்பத்தி அதிகரிக்கும்.

யூலை முதல் குளோறின் இறக்குமதி முற்ருக நிறுத்தப்படும். இப்போது ஒரு மாதம் 12 மெட்றிக்தொன் இறக்குமதி செய்யப்படுகிறது.

ஊத்தைச் சோடாவும் பரந்தனில் உற்பத்தி செய்யப்படும். இதனுல் இதன் இறக்குமதியும் கணிசமான அளவு குறைக்கப்படும். (121)

## கிராமசேவை அலுவலர் பதவிகளை உறுதிசெய்ய நடவடிக்கை!

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்திலுள்ள கிராம சேவை அலுவலர்களின் பதவிகள் உறுதி செய்யப்படுவதற்கு யாழ். அரசாங்க செயலகத்தினுல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் சகல கிராமசேவை அலுவலர்களையும் சிங்களத் தேர்ச்சியில் இருந்து விதிவிலக்களித்து பதவிகளை உறுதிப்படுத்துவதற்கு யாழ். அரசாங்க செயலக நிர்வாகப்பகுதியினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஏழுவருடங்களுக்கு மேலாக சிங்கள மொழியில் தேர்ச்சி அடையாமையினுல் வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. (137)

## 'ஈழநாடு'

### வார மலர்

27-05-1990

- ★ உலகில் தமிழ் மூத்த மொழி
- ★ 'மானுடம் வென்றதம்மா
- ★ துடுப்பு இழந்த ஓடங்கள் (சிறுகதை)
- ★ கனடா கடிதம்
- ★ தமிழிசையின் பங்கும் பழமையும்
- ★ வானொலி நாடகம் – 3
- ★ காலக் கடன் (கவிதை)
- ★ கிழக்கும் மேற்கும் (– 3)
- ★ ஈழத்து புதுக் கவிதை – 1
- ★ நிர்வாகத்தில் நிகழ்பவை
- ★ வைத்திய கலாநிதி பதிலளிக்கிருர்
- ★ ஞாயிறு மஞ்சரி
- ★ மங்கையர் மஞ்சரி
- ★ மாணவர் மன்றம்

மற்றும்

வழக்கமான அம்சங்கள்

விலை ரூபா 4/-

## இராசி பலன்

சனிக்கிழமை
26- 05- 1990

மேடம்: புண்ணிய காரியச் செலவு, மனநிம்மதி, மாற்றம், காரியதாமதம்.

இடபம்: பொய் பேசுதல், ஆடம்பரம், உடல் உபாதை, புதிய நட்பு.

மிதுனம்: வாகன சுகம், வீண்யோசனை, மாற்றம், கடினச் சொல்.

கடகம்: உடல் உபாதை, அரச அதிகாரியின் உதவி, மனச்சோர்வு.

சிங்கம்: நண்பர்விரோதம், கடினவாக்கு, சுபச்செய்தி, நன்மதிப்பு.

கன்னி: கௌரவம், வீண் தொல்லை, காரியத் தடை, யோசனை.

துலாம்: தூரத்துச்செய்தி, ஏமாற்றம், நன்மதிப்பு, மனமாற்றம்.

விருச்சிகம்: அகால போசனம், தொழில் சித்தி, குழப்பம், நல்லவர் உதவி.

தனுசு: சுபச்செய்தி, நன்மதிப்பு, கடினச்சொல், பிடிவாதம்.

மகரம்: போருள் செலவு, நீசரால் தொல்லை, வாக்குத் தவறுதல், தூரத்துச் செய்தி

கும்பம்: கற்பனை, செல்வாக்கு, சாஸ்திர விருப்பு, மாற்றம்.

மீனம்: புதிய ஒப்பந்தம், மறதி, நற் சிந்தனை, அலைச்சல்.

இ. மகாதேவா

## கற்கோவளத்தில் 100 வீடுகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கற்கோவளம் கிராமத்தில் யு. எஸ். ஏ. ஐ. டி. திட்டத்தின் கீழ் யாழ். வீடமைப்புத் திணைக்களத்தினுல் 100 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இத்திட்டத்தின் ஆரம்பவேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (153)

## சாரணர் ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளராக திரு. ஏ. சுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சாரணர் கிளை சங்கத்தின் நிர்வாகக் குழுத் தலைவரும் முன்னுள் யாழ். மாநகரசபை ஆணையாளருமான திரு. சி. வி. கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு ஏ. சுப்பிரமணியம் ஏகமனதாக மாவட்ட ஆணையாளராக தெரிவு செய்யப்பட்டார்.

# பிரி. தூதருக்கு சாரணர் அணிவகுப்பு மரியாதை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் தூதர் திரு. டேவிற் கிளாஸ்ரன், திருமதி எப்பிறம் கிளாஸ்ரன் ஆகியோருக்கு யாழ் மாவட்ட திரிசாணர் குழு (நல்லூர்) வினரால் சாரணர் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

யாழ். ஆங்கில அக்கடமியின் சான்றிதல் வழங்கும் வைபவத்தில் நடைபெற்ற இவ் அணிவகுப்பு மரியாதைக்கு பிரிட்டிஷ் தூதுவரும், பாரியாரும் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

அணிவகுப்பு மரியாதை திரிசாரணர் தலைவர் திரு. ஆர். ஆர். ராஜ்குமார், நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். தேவறஞ்சன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. யாழ் மாவட்ட உதவி ஆணையாளர் (பயிற்சி) திரு. என். நல்லையா சாரணர் அணிவகுப்புக்கு சிறப்பாளராக கலந்து கொண்டார். இவ் அணிவகுப்பில் யாழ். இந்துக் கல்லூரி, நல்லூர் செங்குந்தா இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலை சாரணர்கள் பங்குபற்றி சிறப்பித்தனர்.

## ஆரம்ப சுகாதார நிலையம்

(யாழ்ப்பாணம்)

எழுவைதீவு மக்களின் சுகாதார தேவைக்காக புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கனடிய மக்களின் நிதியுதவியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

முழு சுகாதார வசதியுடன் இயங்க இருக்கும் இந் நிலயத்தை யாழ். ஆயர் வந்தனைக்குரிய வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை விரைவில் திறந்து வைப்பார். இந் நிலயத்தால் தீவக மக்களின் சுகாதாரத் தேவை பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சமுதாய அபிவிருத்தியில் பெண்களின் பங்கு என்ற தலைப்பில் மகளிர் அபிவிருத்தி நிலயம் ஒழுங்கு செய்து, நடாத்தும் கருத்தரங்கு பருத்தித்துறை காந்தியூர்க் கிராமத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கை மந்திகை ஆதார வைத்தியசாலையின் பிராந்திய வைத்திய அலுவலகர் டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை வைபவரீதியாக ஆரம்பித்துவைப்பார். கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக புவியியற் துறைப் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி அம்மன்கிளி முருகதாஸ், திரு. எம். ஸ்ரீபதி, திருமதி சரோஜா சிவச்சந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

## பயிற்சி பெற்ருர்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச ஒலிம்பிக் சபையும், உலக உதைபந்தாட்டச் சம்மேளனமும் இணைந்து உதைபந்தாட்டப் பயிற்சியாளர்களுக்கு நடத்திய உயர்தர உதைபந்தாட்டப் பயிற்சியில் வதிரியைச் சேர்ந்த திரு. திரவியசிங்கம் வரதராசன் சான்றிதழ் பெற்றுள்ளார்.

பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் பயிற்றுனரான இவர், வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக் கழகப் பயிற்றுனராகவும் உள்ளார். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, பதுளை மகிந்தாக் கல்லூரி, மற்றும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய உதைபந்தாட்டக் கோஷ்டிகளில் விளையாடிய இவர் தற்போது கிராமசேவை அலுவலராகக் கடமையாற்றுகின்ருர்.

மேற்கு ஜேர்மன் நாட்டினைச் சேர்ந்தவரும், உலக உதை பந்தாட்ட சம்மேளனத்தின் நிரந்தர உதைபந்தாட்டப் பயிற்றுனருமான திரு. பேக்காட் சீசே என்பவரால் பயிற்சிகள் வழங்கப்பட்டதில் பயிற்சி நெறியில் அகில இலங்கைரீதியில் 34 பயிற்றுனர்கள் பயிற்சி பெற்றனர். இவர்களுக்கான சான்றதழ்களை சர்வதேசஒலிம்பிக் சபையும், உலக உதைபந்தாட்டச் சம்மேளனமும் வழங்கியது. இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் பயிற்சிகளை நெறிப்படுத்தியது.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை காந்திஜீ சனசமூக நிலயத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை திரு அ. முருகவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

## உறுதிபூசுதல் ஆயத்த வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பங்கில் உறுதிபூசுதல் அருட்சாதனத்திற்கான ஆயத்த வகுப்புக்கள் நடைபெற்றுவருகின்றன.

பங்குத்தந்தை அருட்திரு. கிருபானந்தன் தலைமையில் ஊர்காவற்றுறை மறைக்கல்வி பணிக்குழு சகல ஒழுங்குகளையும் செய்துள்ளது.

வட்டு.

## யாழ்.கல்லூரி பரந்தன் கிளை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் கிளை ஒன்று பரந்தனில் உள்ள கனகபுரத்தில் ஆரம்ப பாடசாலையாக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். மகிழ்ராஜா இப்பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டிருக்கிருர். (152)

## புனித அந்தோனியார் திருவிழா

(யாழ்ப்பாணம்)

காவலூர் புனித அந்தோனியார்ஆலயவருடாந்ததிருவிழா அடுத்த மாதம் 4ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 13ந் திகதி திருநாள்திருப்பலியுடன் புனிதரின் பவனியுடனும் நிறைவுபெறும்.

திருவிழா பிரசங்கத்தை நடத்த யாழ்ப்பாணத்தின் பிரபல பிரசங்கியார் அருட்திரு. ஜெயக்குமார் அடிகள் வருகை தரவுள்ளார்கள். திருவிழா ஒழுங்குகளை காவலூர் பங்குத்தந்தை அருட்திரு சாமிநாதர் பிரான்சீஸ் கிருபானந்தன் அடிகள் செய்துள்ளார்கள்.

## பிரவேச பண்டிதர் வகுப்புகள்

(உடுவில்)

இணுவில் அமெரிககமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் இலவச பிரவேசப் பண்டிதர் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயர்தர வகுப்பு மாணவர்களும், பயிலுனர் ஆசிரியர்களும் இதில் சேர்ந்து பயின்று வருகின்றனர். மேலும் சேர விரும்புவோர் உடனடியாக சேர்ந்துகொள்ளுமாறு அதிபர் திரு. எஸ். சோதிப்பெருமாள் அறிவித்துள்ளார்.

பண்டிதை திருமதி த. மகாலிங்கம் பிரவேசப் பண்டிதர் வகுப்புக்களைப் பொறுப்பேற்று நடாத்தி வருகின்ருர். (109)

# "கிராமசேவை அலுவலர்கள் அரச நிர்வாகத்தின் முதுகெலும்பு" - யாழ்.அரச அதிபர்

(சித்தன்கேணி)

"கிராமமட்டத்தில் பணியாற்றும் கிராமசேவை அலுவலர்களே அரச நிர்வாகத்தின் முதுகெலும்பு, ஆதலால் கிராமசேவை அலுவலர்கள் தமது கடமைகளை நேர்மையாகவும், கடமையுணர்ச்சியுடனும் ஆற்றவேண்டும் கிராம மக்கள் தமது தலைவர்கள் கிராமசேவை அலுவலர்களே என்ற எண்ணத்துடன் நடப்பதற்கு மக்களுக்கு வழிகாட்டுபவர்களாகவும், ஆலோசனை கூறுபவர்களாகவும் கிராம சேவை அலுவலர்கள் இருக்க வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட், சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து கிராமசேவை அலுவலர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் மத்தியில் குறிப்பிட்டார்.

உத்தியோக ரீதியாக சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் விஜயம் மேற்கொண்டார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் அரச அதிபரை வரவேற்றார்.

அரசாங்க அதிபர் திரு அன்ரன் அல்பிரட் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: அரசாங்கம் கிராம மக்களின் தேவைகள் குறைகள் ஆகிய விபரங்களை கிராமசேவை அலுவலர்கள் மூலமே பெற்றுக்கொள்கின்றது. ஆதலால் மக்களின் தலைவர்களாக கிராமசேவை அலுவலர்கள் செயலாற்ற வேண்டும் அரசாங்கமும் கிராம சேவை அலுவலர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளது. கிராமசேவை அலுவலர்களுக்கு பல குறைபாடுகள் தேவைகள் இருக்கின்றன. இவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் தமது தலைமையுரையில் கூறியதாவது; 1984ம் ஆண்டுக்குப் பின்பு அரசாங்க அதிபர் ஒருவர் உத்தியோக ரீதியாக இந்தப்பணிமனைக்கு விஜயம் செய்வது இன்றுதான். இதனால் இந்தப் பிரிவு மக்களின் தேவைகள் குறைகள் ஆகியவற்றைக் கூறுவதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கிராமசேவை அலுவலர்களும் தமது கடமைகளை மேற்கொள்ளும் போது தமக்கு ஏற்படும் பிரச்சனைகளை எடுத்துக் கூறுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இன்று இப் பணிமனையில் மேற்கொள்ளும் கடமைகளையும் அரசாங்க அதிபர் நேரடியாக பார்ப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

கிராமசேவை அலுவலர்கள் சார்பில் திரு. மு. தர்மதாசன் பெயர்ப்பலகை, விளம்பரப் பலகை மோட்டார் சைக்கிள் கடன் ஆகியவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், பிரயாணப்படி அலுவலக வாடகை, காகிதாதிகள் ஆகியவற்றுக்கு வழங்கப்படும் பணத்தை அதிகரிக்குமாறும் தெரிவித்தார்.

இதுவரை எந்தவிதமான நிவாரணமும் வழங்கப்படாதவர்களுக்கு மீளக்குடியமர்வு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கூறினர். (137)

# "வந்து பாருங்கள்" நூல் இன்று வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

'ஜீவாண்ணன்' எழுதிய 'வந்து பாருங்கள், நூல்வெளியீட்டு விழா இன்று மாலை முகமாலை பங்குத்தந்தை அருட் திரு. எஸ். ஐ. பிரான்சிஸ் தலைமையில் யாழ். தொடர்பகத்தில் நடைபெறவுள்ளது.

முதற் பிரதியை டாக்டர் பிலிப்ஸ் பெற ஆசியுரையை அருட்திரு. எஸ். எச். ஜெபநேசன் வழங்க அருட்திரு. ஆர். ஈ, ஜெயசீலன் கருத்து வழங்குவார்.

தமிழ்த்தாய் வணக்கத்தை எஸ். ஞானசீலன் பாட வரவேற்புரையை அ. அமிர்தராஜ் நிகழ்த்துவார்.

பி. எவ். சேவியர், அமிர்தநாயகம், நா. யோகராஜா, துரை ஆரோக்கியதாசன், ஆர். இராசதுரை, வி. ஆர். ஞானப்பிரகாசம், ஏ. மரியநாயகம், கே. மனுவல், எம். மரியாம்பிள்ளை, டீ. லூக்காஸ், எஸ். மயில்வாகனம், ஜி. மத்தியாஸ், எஸ் அந்தோனிப்பிள்ளை, இ. ம. ஜெயசீலன், ஏ. எஸ். அந்தோனிப்பிள்ளை, யோ. பெனடிக்ற் பாலன் ஆகியோர் சிறப்புப் பிரதிகள் பெறுவார்கள்.

## பொருட்காட்சி கலைவிழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் விவசாயிகள் சங்கம் நடாத்தும் விவசாயப் பொருட்காட்சி, பகிரங்கக் கூட்டம், கலைவிழா கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. கே. குணரத்தினம் விழாவை ஆரம்பித்துவைப்பார். காலத்தின் கோலம், பொடியன் போன போக்கு ஆகிய நாடகங்கள் விழாவில் இடம் பெறும்.

## சிறப்புரைகள்

(யாழ்ப்பாணம்)

'படைப்பின் சீரிய நிலையும், சூழல் மாசடைதலும்' என்ற தலைப்பில் சிறப்புரைகள் யாழ் நற்சமூக நடுநிலைய மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

நற்சமூக நடுநிலைய இயக்குநர் கலாநிதி சி யோ. இம்மானுவேல் தலைமையில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கலாநிதிதர்மன் மார்க் சவரிமுத்து, கலாநிதி ஐ. ஹென்றி விக்ரர் ஆகியோர் உரையாற்றவுள்ளார்கள். (153)

## வெற்றிடங்கள் நிரப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

முறைசாரக் கல்விப் பிரிவில் 1990-ம் ஆண்டுக்கான மாணவ பயற்சியாளர்களுக்கான சகல வெற்றிடங்களும் அடுத்த மாதம் 30-ம்திகதிக்குமுன்நிரப்பப்படுமென யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவுப் பொறுப்பதிகாரி எஸ். சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்த மாதத்தின் பின்பு அடுத்த ஆண்டுக்கான எந்த விண்ணப்பங்களும் மாணவர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (152)

## உப அஞ்சலக அதிபர் பதவி

[யாழ்ப்பாணம்]

தொண்டமானாறு உபஅஞ்சல் அலுவலகத்திற்கு உப அஞ்சல் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் தொண்டமானாறு கிராமத்தில் வசிப்பவர்களாகவும் 1990 ஜூன் 12 ம் திகதி 21 வயதிற்கு மேற்பட்டவராயும் 45 வயதிற்கு உட்பட்டவராயும் இருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்களை யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலக கண்காணிப்பாளரின் அலுவலகத்தில் பெறப்பட்ட அச்சடித்த படிவங்களில் தயாரித்து ஜூன் மாதம் 12 திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (153)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

பிரதம விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராசாவும், சிறப்பு விருந்தினராக கொக்குவில் கொத்தணி அதிபர் திரு, பஞ்சலிங்கமும், இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் கு. கிட்ணர் ஆகியோரும் பங்குபற்றுகிறார்கள்.

பரிசில்களை திருமதி யசோதரா தியாகராசா வழங்குவார். (152)

## மட்டுநகர் வாடிவீடு திறக்கப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாடிவீடு மீண்டும் விரைவில் திறக்கப்படவுள்ளது. இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மட்டக்களப்பு நகர அபிவிருத்தி அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (121)

## கடற்பாதைக்கு நிதி ஒதுக்கீடு

(வேலணை)

அராலி வேலணை தாம்போதி புதிய கடற்பாதை அமைப்பதற்கு யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதியிலிருந்து இருபத்திபொரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரத்தில் இவ் வீதியின் தொடக்க வேலையும் வெகுவிரைவில் ஆரம்பிக்கப் படவிருக்கின்றது. (75)

## பாராளுமன்றத்தில்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் தெரிவிக்கிறேன்" என்றும் கூறினர்.

**ஹமீத் நம்பிக்கை**

நீதியமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் கூறியதாவது:-

"வடக்கு-கிழக்கில் நிலைமையில் புதிய மாற்றம் ஏற்படவில்லை. வடக்கு-கிழக்குப் பிரச்சனை 1957-ம் ஆண்டின் பின்னர் விஸ்வரூபம் எடுத்துள்ளது. 50 வருடங்களாக இப்பிரச்சனை தீர்க்கப்படவில்லை. கடந்த எட்டு வருடங்களாக இப்பகுதியில், யுத்த நிலை இருந்தது. கடந்த 12 மாதங்களாக என்னால் சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது. வடக்கு-கிழக்கு மக்களின் உரிமைகளை வழங்குவதற்கான பேச்சு வார்த்தைகளைச் தொடர்ந்து நடாத்திவருகின்றேன். எல்லாக் குழுக்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தி தீர்வு காண வழி ஏற்படுத்தப்படும். அரசாங்கத்தின் சமாதானத் தூதுவன் என்ற முறையில்' அதில் வெற்றிகாண வேண்டுமென் தே எனது ஆவல்" என்றார். (அ)

# 3-வது தடவையாக 'ஆர்ஜன்ரீனா' வெற்றிபெற்றால் மறடோனாவின் புகழ் நிலைக்கும்!

நமது விளையாட்டு நிருபர் 'தேவா'

இத்தாலியில் நடைபெற இருக்கும் 14-வது உலககிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் இம்முறை கதாநாயகனாக விளங்குபவர், டிகோ மறடோனாவேதான். ஆம், இவர்தான் தற்போதைய உலகச் சாம்பியனான ஆர்ஜன்ரீனா கோஷ்டியின் தலைவராவார்.

1982-ம் ஆண்டு ஸ்பெயினில் நடைபெற்ற 12-வது உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில், டிகோ மறடோனா, மத்தியஸ்தர்களுக்கு கட்டுப்படாமலும், முரட்டுத்தனமாகவும் விளையாடியதால் மைதானத்திலிருந்து மத்தியஸ்தரால் வெளியேற்றப்பட்டது மட்டுமல்லாமல் தொடர்ந்து போட்டிகளில் பங்கு பற்றுவதற்கு தடையும் விதிக்கப்பட்டது.

இதே மறடோனாதான் 1986-ம் ஆண்டு மெக்ஸிக்கோவில் நடைபெற்ற 13-வது உலக கிண்ண போட்டியில், ஆர்ஜன்ரீனா கோஷ்டியின் காப்டனாகவிருந்து அக் கோஷ்டிக்கு முதுகெலும்பாக விளங்கி சாம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியதுடன், தனது அபார விளையாட்டினால், உலகப் புகழ்வாய்ந்த வீரர் என்ற பெயரையும் பெற்றார்.

ஆர்ஜன்ரீனா நாட்டு மக்கள் தற்போது மறடோனாவையே முற்று முழுதாக நம்பியிருக்கிறார்கள். இம்முறையும் தமது நாடு சாம்பியன் கிண்ணத்தை பெற்று, 650 பவுண் நிறை கொண்ட வெற்றிக் கிண்ணத்தை சொந்தமாக்கி தமது நாட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்குடனே இருக்கிறார்கள்.

ஆனால், வீரர் மறடோனாவின் தலைமையில் இத்தாலி செல்ல ஆயத்தமாகும் கோஷ்டியைப் பற்றி பல கருத்துகள் கூறப்படுகின்றன.

'உலகப் போட்டிக்கு தகுதி பெற்ற 22 நாடுகளும் பல போட்டிகளை முன்னர் சந்தித்த பின்னரே தெரிவு செய்யப்பட்டன. ஆனால், ஆர்ஜன்ரீனாக் கோஷ்டிக்கு அந்தநிலை ஏற்படாததினால், இக்கோஷ்டியின் வீரர்கள் பெரும்பாலானோர், பணத்துக்காக இத்தாலி நாட்டு விளையாட்டுக் கழகங்களில் அங்கம் வகித்து விளையாடி வந்தார்கள். கடைசி நேரத்தில்தான் இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

வீரர் மறடோனா, தமது கோஷ்டியைப் பற்றி கருத்து தெரிவிக்கையில், 'எமது கோஷ்டி வீரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து விளையாடுவதற்கு போதிய அவகாசம் கிடைக்கவில்லைதான், ஆனால்




நாம் தற்போது கடும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளோம். எமது முழுக் குறிக்கோளும் உலக கிண்ணத்தை வென்றெடுப்பதே.

எமது கோஷ்டியின் பெரும்பாலான சிறந்த வீரர்கள் இத்தாலி நாட்டின் பற்பல விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாடியுள்ளார்கள். இதனால் நமது வீரர்களுக்கு அந்த நாட்டு விளையாட்டு மைதானங்களின் நிலைப்பாடு நன்கு தெரியும், அந்த நாட்டு மக்களுக்கு நாம் மிகவும் நெருங்கிய நண்பர்களாகவே இருக்கின்றோம்' எனக் கூறியுள்ளார்.

ஆனால் உலக உதைபந்தாட்ட அவதானிகளின் கருத்துப்படி இம்முறை ஆர்ஜன்ரீனாக் கோஷ்டி உலக கிண்ணத்தை வென்றெடுக்குமா என்பது ஒரு கேள்விக்குறி எனக்கூறுகிறார்கள். ஏனெனில் கடந்த 1986-ம் ஆண்டு உலக கிண்ணப் போட்டியில் விளையாடிய எட்டு வீரர்கள் இம்முறையும் ஆர்ஜன்ரீனாக் கோஷ்டியில் அங்கம் வகிக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் 30 வயதைத் தாண்டி முதுமை நிலையை அடைந்து விட்டதாகக் கூறப்படுகிறது. உலகப் புகழ்பெற்ற மறடோனாவே 29 வயதைத் தாண்டிவிட்டார். இவர் அண்மையில்தான் திருமணமும் செய்து கொண்டவர். இக்கோஷ்டியின் பயிற்சியாளர் காலோஸ் பிலாடோ, பழைய வீரர்களிலேயே நம்பிக்கை கொண்டுள்ளார். இளம் வீரர்களான கிளோடியோ காணிக்கை (வயது 23), கலோஸ் மொறேனோ (வயது 25) போன்ற வீரர்களுக்கு இப்போட்டியில் விளையாட சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று ஆர்ஜன்ரீனா நாட்டுமக்கள் குரல்எழுப்புகின்றனர். இக்கோஷடியின் நிலைப்பாடு, ஜூன் 8ம் திகதி முதல் போட்டியான கமரூனுடனான ஆட்டத்திலிருந்து தெரிந்துவிடும்.

**சாதனைகள்**

ஆர்ஜன்ரீனாவின் உதைபந்தாட்டச் சங்கம் 1983ம்ஆண்டு உதயமாகியது. 1978, 1986ம் ஆண்டுகளில் உலகிண்ணத்தைவென்றது. 1930 ம் ஆண்டு உலக கிண்ணப்போட்டியில் 2ம் இடத்தைப் பெற்றது. 1934. 1958, 1962, 1966, 1974, 1982ம் ஆண்டுகளில் உலகப் போட்டியில் விளையாடத் தெரிவு செய்யப்பட்டது. ஆர்ஜன்ரீனா இதுவரை 41 போட்டிகளில் பங்குபற்றி 22 போட்டிகளில் வெற்றபெற்று 6 போட்டிகளை சமப்படுத்தி 13 போட்டிகளில் தோல்வியடைந்து. 50 புள்ளிகளைப்பெற்றுள்ளது.

அடுத்து உலக கிண்ணத்தை மூன்று தடவைகள் வென்றெடுத்த பிரேஸில் கோஷ்டியைப்பற்றி பார்ப்போம்.

## பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

மனித வள அபிவிருத்தி அமைச்சினால் 67 பட்டதாரிகளுக்கு பயிற்சி வகுப்பொன்று யாழ். கல்வித் திணைக்கள முறைசாராப் பிரிவினால் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. (152)

## கிளிநொச்சி மாவட்டத்தில்
# முதலாவது நடமாடும் செயலகம் வன்னேரிக்குளத்தில் ஆரம்பமாகியது!

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தின் முதலாவது நடமாடும் செயலகம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரச திணைக்கள இணைப்பாளர் திரு. சிவபாதம் மேலதிக அரச(அதிபர்) காணி திரு.கே.குணராசா, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பவானி ஸ்ரீஸ்கந்தராசா, உதவி அரச அதிபர்கள் வேலுப்பிள்ளை, துரைராசா, மாவட்ட மேலதிக பதிவாளர் திரு. என். சதாசிவ ஐயர், மாவட்ட காணிஅதிகாரி திரு. சுப்பிரமணியம் மற்றும் மாவட்டத்தின் சகல திணைக்கள தலைவர்களும் செயலக அலுவல்களில்கலந்துகொண்டு வன்னேரிக்குளம் மக்களின் தேவைகளை உடன் நிவர்த்தி செய்து வைத்தனர்.

சுவர்ணபூமித் திட்ட உறுதி வழங்கும் வைபவத்தை வல்லிபுரம் சுந்தரம் என்பவருக்கு அரசாங்க அதிபர் முதலாவதாக வழங்கி நடமாடும் செயலக அலுவல்களை ஆரம்பித்து வைத்தார்.

நூற்றுக்கு மேற்பட்ட மக்களுக்கு உணவு முத்திரை, மாதாந்த உதவிப்பணம் புனர்வாழ்வு உதவிகள் இங்கு வைத்து வழங்கப்பட்டதாகவும் இந்நடமாடும் செயலகம் வன்னேரிக்குள மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் எனவும் உதவி அரச அதிபர் திரு. வேலுப்பிள்ளை ஈழநாடுவுக்கு தெரிவித்தார்.

நடமாடும் செயலகத்தில் பொது மக்கள் முன்வைத்த பிரதான வீதி சீரமைப்புவேலைகள் நடமாடும் செயலகம் நடந்துகொண்டிருந்த வேளையில் ஆரம்பமாகியதை அடுத்து மிகவும் பின்தங்கிய வன்னேரிக்குளம் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அரச அதிபருக்கு நன்றி தெரிவித்தனர்.

வீதி சீர்கேட்டால் இந்தப் பகுதியில் போக்குவரத்து நடைபெருது. இருந்த வட பிராந்திய போக்குவரத்து பஸ்சேவை உடன் ஆரம்பமாகும் என அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## நெடுந்தீவில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

இராமேஸ்வரம் எல். என். நாகராஜ் என்பவருக்கு சொந்தமான எஸ். ரி. பி. 121 இலக்கம் கொண்ட 'சுடலை மாடன்' என்று அழைக்கப்படும் இந்த படகில் வந்த எம். அருள்தாஸ், எஸ். முனியசாமி, ஐ. மணி, எஸ். தியாகராஜ், எஸ். முஸ்தபா, எஸ். சுப்பிரமணி ஆகிய ஆறு மீனவர்களும் எவ்வித பாதிப்புகளுமின்றி தப்பித்துக்கொண்டார்கள்.

## மா, பாண்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தல் உணவு ஆணையாளரினுல் அறிவிக்கப்பட்டுள்ளதென்று யாழ் உணவிக்கட்டுப்பாட்டதிகாரி தெரிவித்துள்ளார். இந்த விலை அதிகரிப்பு அறிவித்தலை கூட்டுறவுச் சங்கங்கள் கவனத்தில் எடுக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. [71]

## சித்த மருத்துவ
(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரி, திரு. பி. வி. விமலதாஸ்

சாதாரண சித்தியடைந்தோர்: செல்வி எஸ். அருந்தவராணி, செல்வி வி. கனகேஸ்வரி, செல்வி கே. மங்களகுமாரி, செல்வி பி மங்களேஸ்வரி, செல்வி ஆர். நாகேஸ்வரி, செல்வி ஆர். இராஜராஜேஸ்வரி. திரு. ரி. சத்தியசீலன், செல்வி பி. சாந்தநாயகி, திரு. எஸ், வடிவேலு, திரு. எஸ். யோகேந்திரன், திரு. ஐ ஜெபநாமகணேசன்.

சித்தமருத்துவ சத்திர சிகிச்சை நான்காவது வருட பரீட்சை - 1989 முடிவுகளில் இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு): செல்வி கே நீலவேணியம்மாள், செல்வி பி. சைலஜா இரண்டாம் வகுப்பு (கீழ்ப்பிரிவு);

செல்வி [illegible]. அம்பிகை, செல்வி [illegible]. ஜெயலக்ஷ்மி, செல்வி என். பவளராணி, செல்வி என். சசிகலா, செல்வி கே. சற்குணதேவி.

சாதாரண சித்தியடைந்தோர்: செல்வி எஸ். அமுதாம்பாள், செல்வி கே. நாகேஸ்வரி, செல்வி ரி. நவலக்ஷ்மி, செல்வி ஆர். சிவசக்தி, திரு. கே. சிவராஜா, செல்வி எஸ் சுதாமதி, செல்வி ரி, ஈலினிவரோணு.

சித்த மருத்துவ சத்திரசிகிச்சை மூன்ருவது வருட பரீட்சை 1989 முடிவுகளில் இரண்டாம் வகுப்பு (கீழ்ப்பிரிவு): செல்வி. பி. பத்மலோகினி, செல்வி எஸ் சுமதி, திரு. பி. சுரேசன், செல்வி எஸ். வைஜந்தி.

சாதாரண சித்தியடைந்தோர்: திரு. எஸ். சிறிசுப்பிரமணியம், செல்வி எஸ். சிவமலா, செல்வி எஸ். திரிபுரா நாயகி.

சித்த மருத்துவ சத்திரசிகிச்சை இரண்டாம் வருட பரீட்சை - 1989 முடிவுகளில் இரண்டாம் வகுப்பு [கீழ்ப்பிரிவு]: செல்வி எஸ். சியாமளா.

சாதாரண சித்தியடைந்தோர்: செல்வி கே.ரேணுகா, செல்வி ஆர். சாந்தினி, செல்வி சி. சுகந்தி.

சித்தமருத்துவ சத்திரசிகிச்சை முதலாம் வருட பரீட்சை - 1989 முடிவுகளில் இரண்டாம் வகுப்பு [கீழ்ப்பிரிவு] சித்தியடைந்தோர்: செல்வி ஆர். ரஜிவி, திரு.எஸ். சிவக்கொழுந்து, செல்வி. சி. சுமதி.

சாதாரண சிந்தியடைந்தோர்: செல்வி ஏ. எஸ். டி. அல்பிரட், செல்வி எஸ். மோகமதி, திரு. எம். ஏ. சிராஜ்தீன், செல்வி ஆர். மதிவதனு, திரு.சி. ஸ்ரீதரன், திரு எஸ். யோகநாதன், செல்வி கே. கிருஷ்ணகௌரி, செல்வி எஸ். வானதி. [153]

## நிர்வாக விடயங்களில்
# தலையிடக்கூடாதென்று எங்கள் தலைவர் சொல்லியிருக்கிருர்
## - டொமினிக்

[யாழ்ப்பாணம்]

''எங்கள் தலைவர் நிர்வாக விடயங்களில் தலையிடக் கூடாது என்று சொல்லியிருக்கிருர். அதன் பிரகாரம் நாங்கள் பார்வையாளராக, பங்காளராக கலந்து உங்களோடு சில பிரச்சனைகளை கலந்தலோசிப்பதற்கு வந்திருக்கிறோம்''

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னனியின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. டொமினிக் கிராமசேவையாளர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினருக்கும் இடையே நேற்று மனேகரா தியேட்டரில் நடந்த கலந்துரையாடலில் குறிப்பிட்டார்

''கிராம சேவையாளர்கள் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு பொதுமக்களோடு நடக்க வேண்டும். அவர்களை நல்ல முறையில் வழிநடத்தல் வேண்டும். தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும். நிர்வாகம் திறம்பட நடக்க முற்று முழுதாக சுயநல நோக்கை நீக்குங்கள். மக்களை அணுகி அன்போடு அவர்கள் பிரச்சனையை தீர்த்துஅனுப்புங்கள்'' என்ருர்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு. ராசன் பேசுகையில் கூறியதாவது: கிராம சேவையாளர் மக்களோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். நீங்கள் அவர்களின் உள்ளங்களை வெல்லவேண்டும், என்ருர்

இக்கூட்டத்தில் யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் திரு. சண்முகநாதன், திரு. அருண்மாஸ்டர் ஆகியோரும் பேசினர். [152]

## மலையக மக்களுக்கு
(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தும் பொதுவேலை நிறுத்தம் இடம்பெற்றது.

இவ்வேலை நிறுத்தம் முழுமையாக வெற்றியும்பெற்றது.

1948-ம் ஆண்டு திட்டமிட்டு சிங்கள அரசு மலையகம்வாழ் தமிழ் மக்களின் குடியுரிமையைப் பறித்தது. 1948-ம் ஆண்டு மலையகம் வாழ் தமிழ் மக்களின் குடியுரிமை பறிபோவதை எதிர்த்ததோடு தான் தமிழ் பேசும் மக்களின் போராட்டம் தொடங்கியது.

அன்றிலிருந்து இன்றுவரை மலையகம்வாழ் தமிழ்மக்களின் பிரச்சனைகள் அவர்களோடு கலந்து பேசாமலேயே தீர்க்கப்படுகின்றன.

மனித உரிமைகள், மனிதத் தன்மைகளை இவற்றை மதியாது ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. ஏதோ பொருட்களை வாங்கி விற்பது போல் மலையகம் வாழ் தமிழ் மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன.

அம்மக்களை பிரதிநிதித்துவ படுத்திய துரோக தலைமைகள் தமக்கு சலுகைகள் பெற பிரார்த்தனைகள் நடத்தினுர்களே தவிர உரிமைகளுக்காக போராடியதில்லை.

இன்று உரிமைகளுக்காக போராடும் மக்களை இவர்கள் காட்டிக்கொடுக்கின்ருர்கள்.

சிங்கள அரசு தமிழ் பேசும் மக்களை இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள், முஸ்லிம்கள் எனப் பிரித்தாள முயல்கின்றது, அதேபோல் மலையகம் வாழ் தமிழ் மக்களின் தலைவர்கள் எனச்சொல்லிக்கொள்பவர்கள் தமது சுயநலனுக்காக இத்தீவில் வாழும் தமிழர்களை இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர் எனப் பிரித்துப் பேசுவதையும் பார்க்கின்றோம்.

இத்தீவில் வாழும் தமிழர்களை அரசும் அரச கூலிகளும் பிரித்துப் பார்த்தாலும் எம்மைப் பொறுத்தவரை அவர்கள் தமிழர்கள். தமிழர்களை யாரும் பிரிக்கமுடியாது. எந்தத்தமிழ் பேசும் ஒருவரையும் அரசு ஒடுக்குவதையோ கொலை செய்வதையோ நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

இன்று சிங்கள அரசு மலையகம் வாழ் தமிழ் மக்கள் மீது அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது. நாடுகடத்த முனைந்துள்ளது.

மலையகம் வாழ் தமிழ்மக்கள் இனப் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு இந்தியா செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

அந்தச் சூழலில் ஒரு பகுதியினர் இந்திய கடவுச்சீட்டைப் பெற்றிருக்கலாம்.

இன்று அக்கடவுச் சீட்டைப் பெறறவர்களோடு அவர்களது பிள்ளைகளையும் நாடு கடத்த முயல்கிறது சிங்கள இனவாத அரசு.

இவர்கள் எல்லோரும் இத்தீவின் குடிமக்கள்.

பிரச்சனைக்குரிய மக்களைக் கலந்துபேசாது செய்த-இன்று செத்துப்போன ஒப்பந்தங்களுக்கு மீள உயிர் கொடுக்க வேண்டிய தேவையில்லை.

இன்று நாம் கேட்பதெல்லாம் இம்மக்களை நாடு கடத்தக் கூடாது என்பதுதான்.

எம்மைப் பொறுத்தவரை தமிழ்நாடும்; தமிழக முதல்வரும் இவர்களுக்கு சிறீலங்கா அரசு குடியுரிமை வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ள வேண்டும். இவர்களை நாடு கடத்தும் முயற்சிக்கு ஆதர தரவும் கூடாது.

## வடக்கு கிழக்கு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது கொழும்பிலோ அல்லது அங்குள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலிலோ கூடமுடியும்.

மாகாணசபையின் 38 ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினரில் முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் தவிர்ந்த ஏனையோர் கொழும்பில் தங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

மாகாண சபையின் ஈ என் டி. எல். எவ் 11 உறுப்பினர்களும், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் 11 பேரும், ஐக்கியதேசியக்கட்சி உறுப்பினர் ஒருவரும் அங்கத்துவம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்று
(1ம் பககத் தொடர்ச்சி)

தில் உள்ள சகல சனசமூக நிலையங்களுக்கும் விளையாட்டுக் கழகங்களுக்குமான பொதுக்கூட்டமொன்று இன்று சனிக்கிழமை பிற்பகல தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வட்டுக்கோட்டை பிரதேசக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## நெடுந்தீவு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிடத்தக்கது.

இக்குதிரைகள் பல இலங்கையின் பல இடங்களுக்கு கடத்தப்பட்டும் வந்தன.

குதிரைகளின் பாதுகாப்பை தங்களது விசேட கவனத்திற் கொண்டுதந்த விடுதலைப்புலிகள்; குதிரைகள் நெடுந்தீவின் தேசிய சொத்தென்றும் அதற்கு உரிமை கொண்டாடுவது. விற்பது தீவுக்குவெளியே கொண்டுசெல்வது முற்ருகத் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் அறிவித்துள்ளனர். (133)

## மரண அறிவித்தல்

### திரு. சின்னக்குட்டி கதிரவேலு
(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்)

மாரீசன்கூடலைச் சேர்ந்த சின்னக்குட்டி கதிரவேலு 25-05-90ல் காலமாகிவிட்டார், இவர் காலம்சென்ற சின்னக்குட்டி வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், திரு. கணபதிப்பிள்ளை, காலம் சென்ற செல்லத்துரை (பலாலி ஆசிரியர் கலாசாலை), திரு. வீரசிங்கம், காலம் சென்ற திருமதி தெய்வானை, திருமதி செ. இரத்தினசிங்கம் (ஆசிரியர் யாழ். இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புச்சகோதரரும், இந்திராதேவி, ஞானரஞ்சினி, இராஜேஸ்வரி, இரத்தினசிங்கம், இராமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னரின் ஈமைக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 26-05-90 (இன்று) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் மாரீசன்கூடல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. வீரசிங்கம்

மாரீசன்கூடல்,
இளவாலை.

(சி 3906)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு வைகாசி மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

எமது இன்றைய
புதிய வெளியீடுகள்

(1) DR. ராஜசேகர் ★ கீதா
"மன்னிக்க வேண்டுகிறேன்"
(ஒறிஜினல்)

(2) எம். ஜி. ஆர். ★ அஞ்சலிதேவி ★ வீரப்பா
"சர்வாதிகாரி"
(ஒறிஜினல்)

குணம்
வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்